
செந்தமிழ்ச் செல்வி



அரசு

சிலம்பு-௫அ   தி. வ. ஆண்டு-உ0...   தை   பரல்-ச

பிப்ரவரி 1984

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.

உ. முனைவர் தமிழண்ணல், பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

ங. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

ச. முனைவர் பொன் சௌரிராசன், தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

ரு முனைவர் பொன் கோதண்டராமன், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சா முனைவர் கு பரமசிவம், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

எ. பேராசிரியர் கு சுந்தரமூர்த்தி, எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

அ. முனைவர் சொ சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

கூ கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

க0 முனைவர் வீ. ப. கா. சுந்தரம், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

நிறுவனர்: தாமரைச்செல்வர் வ. சுப்பையா.

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ தி. வ. ஆண்டு உ0கரு, தை பரல்-சு

பிப்ரவரி 1984



வாழ்க வ. சு. அவர்களின் புகழ் !

1983 சனவரி 24!

ஒளிமிகுந்த கழக வரலாற்றில் ஒரு பேரிருள் சூழ்ந்து, தமிழ் நெஞ்சங்களையெல்லாம் வருத்திய நாள் இந்த நாள்!

ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் தமிழ்—தமிழர்—தமிழ்நாடு என்ற எண்ணங்களையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு, பதிப்புத் துறை மூலம் தமிழ்மொழி வளர - தமிழினம் நலம்பெற - தமிழ்நாடு முன்னேற அயராது பணியாற்றிய கழக ஆட்சியர், தாமரைச் செல்வர் உயர்திரு. வ. சுப்பையா அவர்கள் தமது 86ஆவது அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி சேர்ந்தநாள் சனவரி 24! ஆம்! மறக்க இயலாத நாள்!

ஐயா அவர்கள் மறைந்து ஓராண்டுக்காலம் உருண்டோடி விட்டது. இவ் வேளையில் ஐயா அவர்களின் வாழ்வில் நாம் கண்ட பணிச் சிறப்புகளை நினைவுகூர வேண்டியவர்களாகிறோம்.

''முப்போதும் தமிழுக்கே உழைக்கத் தக்க
பெருநல்லான் தமிழ்ப் புலவன் சுப்பையன்''

எனப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். இங்ஙனம் பாவேந்தரின் பாராட்டினைப் பெறுமளவிற்கு நல்ல தமிழ்நூல்களை நூற்றுக் கணக்கில், ஏன்—ஆயிரத்துக்கு மேற்பட்ட அளவில் வெளியிட்டு, கழகம் இல்லையேல் தமிழ் இல்லை என்னும்படி பதிப்புத்துறையில் ஒரு மாபெரும் புரட்சி செய்தவர் வ. சு. அவர்களாவார்கள்!

திரு. வ. சு. அவர்கள் ஒரு புத்தக வணிகராகமட்டுமின்றி ஒரு சிறந்த பதிப்பாசிரியராகவும், நூல்களை ஆய்வுசெய்து தேர்ந்து தெளிந்து வெளியிடுதலில் ஒரு புலவராகவும், சைவ சமயத்தின் பாது காவலராகவும் திகழ்ந்தார்.

புல அரிய நூல்களை, அவற்றின் பயன்கருதி வெளியிட்டாரே யன்றி வணிக நோக்குடன் வெளியிட்டாரல்லர் வ. சு.

கேள்வியும் கல்வியில் அடங்குமென்பர். எனவே, கல்வியைப் பரப்ப விரும்பிய வ. சு. அவர்கள், சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும், தமிழக வரலாறு போன்ற வரலாறுகளையும், சமயக் கருத்துகளையும் அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவாற்றச் செய்து, அவற்றை நூலுருவாக்கி, ஒரே நேரத்தில் கல்வியும் கேள்வி யும் பரவும் வகைகண்டவர்.

கல்விக் கழகு கசடற மொழிதலன்றோ ? எனவே பிழையின்றிப் பேசவும் எழுதவும் வழிகாட்டும் பிழை நீக்கி எழுதும் முறை போன்ற பயனுள்ள நூல்களையும் ஆங்கிலம் தமிழ், தமிழ் ஆங்கிலம் போன்ற அகராதிகளையும் ஆட்சிச்சொல் அகர வரிசை, பல்பொருள் அகர வரிசை என்பன போன்ற அகரவரிசை நூல்களையும் வெளியிட்டு மக்களிடையே நல்ல—தூயதமிழ் வளர வகை செய்தார்.

சைவமும் தமிழும் தழைத்திடச் செய்ததோடமையாது வட மொழியின் மேலாண்மையால் தமிழும் ஆரியக் கோட்பாடுகளால் சமயமும் கேடுறுவண்ணம் மறைமலையடிகளாரைப் பின்பற்றித் தனித் தமிழ் இயக்கத்தினைச் செயல்படுத்திக் காட்டிய செயல்வீரர் அவர்!

இவை அனைத்துக்கும் மேலாக இந்தி எதிர்ப்பில் இவர் காட்டிய ஆர்வமும் அக்கறையும் அளவிடற்பாலனவல்ல அவற்றையெல்லாம்.

ஈண்டு விரிக்கிற் பெருகும். பிறமொழி கலவாத தனித் தமிழ் எழுது வதிலும் பேசுவதிலும் தமது இறுதிக்காலம் வரையில் உறுதியோ டிருந்ததும், சமயத் துறையில் ஆரியம் கலவாத தனித்தமிழ்ச் சடங்கு களையே போற்றி வளர்த்ததும் இவரது மொழிப்பற்றுக்கும் இனப் பற்றுக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

நூற்பதிப்பு, சமயப் பாதுகாப்பு என்று இவற்றுடன் நின்று விடாது, ஐயா அவர்கள் அறப்பணிகளிலும் நாட்டம் செலுத்தினர். அதன் விளைவே, இந்நாளில் சென்னையில் புகழ் பரப்பி நிற்கும் மறை மலையடிகளார் நூல் நிலையம், நெல்லையில் சிவஞான முனிவர் நூல் நிலையம், குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி, மகளிர் கலைப் பயிற்சிக்கூடம் என்றின்ன பிற பொதுநலப் பணிகளாகும்.

பதிப்புத்துறையில் யாரும் எட்டமுடியாத ஓரிடத்தை எட்டிய தாலன்றோ இவருக்கு இந்தியப் பேரரசு 'பத்மஸ்ரீ' என்னும் விருதினை வழங்கிச் சிறப்பித்தது! அதனையே 'தாமரைச் செல்வர்' எனத் தனித் தமிழாக்கித் தம் பெயருடன் இணைத்துக்கொண்டார் இவர். தமிழக அரசு 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் விருதினையும், மதுரைப் பல்கலைக்கழகம், 'பேரவைச் செம்மல்' என்னும் விருதினையும் வழங்கிச் சிறப்பித்தமை ஈண்டுக் குறிப்பிடத் தக்கவை.

கொண்ட கொள்கையில் உறுதிப்பாடு - செய்வன திருந்தச் செய்யும் சீர்மை - நிறுவனத்தை நடத்திச்செல்வதில் கண்டிப்பு பொருளியல் துறையில் சிக்கனம் இன்னபிற நல்லியல்புகளின் உறை விடம் நம் வ. சு. அவர்கள்.

இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அப் பெரியாரின் பெற்றியினைப் போற்றி வாழ்வதே நாம் அன்னாருக்குக் காட்டும் நன்றியாகும்.

வாழ்க தாமரைச் செல்வர் வ. சு. அவர்களின் புகழ் !

நாடும் மொழியும் நலமுற வேண்டி
நாளும் உழைத்திட்ட நல்லவரும் வல்லவரும்
ஆனதிருத் தாமரையின் செல்வரவர் வந்தே
நற்றமிழர் நெஞ்சங்களில் நாளும் நிறைந்திட்டார்
அன்னவரின் வழிநின்று அருந்தமிழை வளர்த்திடுவோம் :

———

கழகம் காப்போம்!

[பேராசிரியர் சிவ. சிவராமலிங்கம், எம். ஏ.]

அய்யாவின் முதலாண்டு நினைவு நாளில்
அவருடைய சிந்தனைகள் பகிர்ந்து கொள்வோம்
தொய்யாத வகையினிலே தொண்டு செய்து
தூய்தமிழும் சிவநெறியும் காத்து வாழ்வோம்
பொய்யாகிப் பழங்கதையாய்ப் போகும் நூல்கள்
புகுந்தலைக்கும் புன்மைநிலை போதல் வேண்டும்
மெய்யாகப் பொதுமைநலம் மேவும் வண்ணம்
மேன்மைமிகு தமிழறமே மிளிர்தல் வேண்டும்.

அனைத்துலகத் தமிழர்களும் அமைவாய் நந்தம்
அன்னைமொழி தமிழ்தன்னைக் காத்தல் வேண்டும்.
தினைத்துணையும் தமிழுணர்வே இல்லா ராகித்
திரிகின்ற மக்களெல்லாம் திருந்தி வாழ்வில்
நினைத்துச்செயும் ஒவ்வொன்றும் தமிழ்வ ளர்ப்பாய்
நிகழ்ந்துபழம் பண்பாடு நிலைத்தல் வேண்டும்.
கனைத்தொலிக்கும் மொழிக்கெல்லாம் கால்பி டிக்கும்
கருத்தொழித்துக் கற்கண்டுத் தமிழைக் காப்போம்.

நாளேடு திங்களிதழ் பருவ வாரப்
பத்திரிகை என்பவற்றில் பணத்துக் காகக்
கூளம்போற் செய்திகளைக் குவித்துத் தந்து
கோபுரத்தில் குப்பைகளை ஏற்றி வைத்து
வாளரவாய் நமைவருத்தும் வாட்டம் நீங்க
வளமான இலக்கியங்கள் வருதல் வேண்டும்.
கோளாய்வும் நூலாய்வும் குறித்த செய்தி
குவித்திதழ்கள் கொடுக்கட்டும் கும்பிட் டேற்போம்.

பெரியாரும் மறைமலையும் பிறரும் அந்நாள்
பெரும்பாடு பட்டடர்த்த ஆரி யத்தை
அரியணையில் மீட்டிங்கே அமர வைக்கும்
அறிவில்லாத் துரோகிகளின் ஆட்டம் நிற்க
உரியவகை போராட்டம் துவங்கி யேனும்
உயிர்நாட்டைக் காத்திடுவோம் ஓடி வாரீர்
தெரியாமல் ஊடுருவித் திரும்பப் பார்க்கும்
திருடர்களை இனங்கண்டு கெடுத்தல் வேண்டும்.

நல்லதமிழ்ப் பண்பாட்டை நாட்டு மக்கள்
நயந்தேற்றுப் போற்றுதற்கு வசதி யாக
வல்லதொரு புத்தமைப்பை வளர்த்தல் வேண்டும்
வாட்டுகின்ற தமிழ்ப்பகையை ஓட்டல் வேண்டும்
வெல்லரிய பழநூல்கள் புதிய நூல்கள்
விலைகொடுத்து வாங்குநிலை ஓங்க வேண்டும்
பல்லவையும் பண்பாட்டுக் கூட மாகிப்
பரிவோடு பொறுமையாவும் பரப்பல் வேண்டும்.

வண்டமிழைக் காப்பதற்காம் வழிகள் தம்மை
வாணிபமாய்த் தன்னலமாய் மாற்றல் வேண்டா
கொண்டதமிழ்ப் பற்றுளர் கோடி நூல்கள்
கொடுத்துவிட்டுச் சென்றவரின் கொள்கைவாழக்
கண்டுபணி செய்யரசும் கவன மாகக்
களையெடுத்துத் தமிழ்ப்பயிரைக் காத்தல் வேண்டும்
ஒண்டவரும் பகையொதுக்கி வாழ்ந்து விட்டால்
உயர்வன்றி ஒருபொழுதும் தாழ்வே இல்லை.

தமிழ்நூல்கள் பலவாங்கிப் பயிலும் எண்ணம்
தனித்தனியாய் அனைவர்க்கும் வருதல் வேண்டும்
தமிழாலே பிழைப்பவர்க ளேனும் நல்ல
தரமான தமிழ்நூல்கள் வாங்கல் வேண்டும்
தமிழ்மொழியில் பிறமொழியின் அறிவு நூல்கள்
தாமியற்றி அச்சேற்றிக் கொணர்தல் வேண்டும்
தமிழ்முன்னோர் யாத்தளித்த பழைய நூல்கள்
தக்கவகை பதிப்பிக்கும் கழகத் தொண்டு

நிலையாக நிகழ்ந்துவரத் தமிழ ரெல்லாம்
நினைவாக நிதமுதவி செய்தல் வேண்டும்
கலைமன்றம் நூல்நிலையம் காட்சிக் கான
காணரிய பொருட்குவியல் காத்தல் வேண்டும்
மலையளவு பணிசெய்து மாண்பு பெற்ற
மாமன்னர் சுப்பையா மனங்க ளிக்க
இலையொக்கும் தொண்டேனும் செய்து வாழ்வோம்
ஏமாந்து கிடந்திட்டால் ஏற்றம் இல்லை.

———

இனியொரு 'பிள்ளை' பிறப்பாரோ ?

[பேராசிரியர் தமிழன்பன், எம். ஏ., எம். தமிழ்]

பாடல் சான்ற தமிழ்க்கிழவர்
பேரவைச் செம்மல் பெரும்புலவர்
பாடு பட்டே சைவத்தமிழ்
பதிப்புக் கழகம் கண்டனர்காண் !
எல்லாத் துறையும் தாய்மொழியில்
இலங்கச் செய்த 'சுப்பையா'
இல்லா இடத்தை நிரப்புதற்கு
இனியொரு "பிள்ளை' பிறப்பாரோ !

மடங்களி லுறைந்த தென்மொழியை
மன்றங் காணச் செய்துவே
திடங்களிற் றனியா யழிந்திட்ட
ஏட்டை நூலாய் வெளியிட்டு
அச்சுக் கலைத்துறை யிமயமாய்
ஆட்டை பலவாய் திகழ்'பிள்ளை'
மெச்சும் செந்தமிழ் மண்ணிலவர்
மீட்டுப் பிறக்க வேண்டுவனே !

மறைமலை யடிகள் வழிநின்று
மொழிமுதல் சமயம் சிவமென்று
திருமறைச் செல்வர் 'சுப்பையா'
திருப்பணி மிகப்பல செய்தனர்காண் !
திறம்பட ஆற்றிய தமிழ்த்தொண்டில்
தோன்று 'செந்தமிழ்ச் செல்வி' நீ
உறங்கிடும் அறிஞர் தமைப்புரந்து
உலகில் முதனிலை அடைவாயே !

யார் இனிமேல் தோன்றிடுவார் !

தெய்வத் தமிழ்வளர்த்த திருவினராம் சுப்பையா
மெய்கண்ட மேதினியில் மேதக்க தொண்டரவர்
பெய்யும் மழையெனவே பெறற்கரிய நூல்தந்தார்
ஐயா அவர்களைப்போல் யார்இனிமேல் தோன்றிடுவார்!

— நாஞ்சில், கா. கணபதி

வையையும் வைகையும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

'வைகையிலே நீராடி' எனப் பாட்டு ஒலிக்கிறது. 'வைகை அணை' வாய்த்துள்ளது; 'வைகை விரைவான்' மதுரை - சென்னைக்கு இடையே கிளர்ந்தோடுகின்றது; 'வைகை அங்காடிகள்' மினிர் கின்றன. ஆனால் வைகையில் அமைந்துள்ள மொழிச்சிதைவோ, இவ்விடங்களில் எல்லாம் எள்ளி நகையாடுகின்றது! அறிவறியார் செயல்களா இவை! ஆங்கிலப் பெயர் ஒன்றற்கு இங்ஙிலை என்றால் எத்தனை கூப்பாடுகள் எழுந்திருக்கும்! எத்தனை இதழர்கள் - அறிஞர்கள் - வரிந்து கட்டிக்கொண்டு வந்திருப்பர்?

வையையாறு பாடுபுகழ் பெற்றது என்பதைச் சொல்ல வேண்டியது இல்லை! 'தமிழ் வையை' அப் பேறு பெறுதற்கு ஐயமென்ன? 'தமிழ் கண்டதோர் வையை' என்று பெரும்புலவர் பாரதியார் பாடினரே! அந்த வையை 'வைகை' என எப்படி ஆயது?

சங்கத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் பல பாடல்களை உரிமை கொண்டது வையை! மதுரைக் காஞ்சி, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, சிலம்பு ஆகிய இவற்றிலும் பாடுபுகழ் பெற்றது. இவற்றில், வையை என்னும் ஆட்சிமட்டும் 50 இடங் களில் உண்டு! அம்மட்டோ? வையை எக்கர், வையைக்கரை, வையைக்கரை அணிகா, வையைக்கோன், வையைச் சிறப்பு, வையைத்தண்ணம்புனல், வையைத்திருமருத முன்றுறை, வையைத் திரைச்சிறை, வையைத்துறை, வையைத் தொழுவம், வையைநதி, வையைநீர், வையைப்புதுப்புனல், வையைப்புனல், வையைப் பெருக்கு, வையைப்பேரியாறு, வையைமணல், வையைமருதோங்கு முன்றுறை, வையையகம், வையையார்கோமான், வையையார்கோன், வையையாறு, வையைவரவு, வையைவனப்பு, வையைவான்துறை என்னும் ஆட்சிகள் நிரம்ப உண்டு. ஆகவும் வையை வைகையாகி விட்டது! சங்கத்தொகை நூல்களிலும் சங்கஞ்சார்ந்த சிலம்பிலும் ஓரிடத்தும் வாராத 'வைகை'க்கு அவ்வளவு வரவேற்பா? பழ வையைக்குப் புறக்கணிப்பா ?

பண்டைப் பொருளையும் இடத்தையும் அதனதன் வண்ணமும் வனப்பும், இயலும் நிலையும் மாறுவண்ணம் போற்றிக் காக்கவென அமைந்த தொல்பொருள் துறையும், 'வைகை'யைத் தானே போற்ற

முந்துகிறது! வையையைக் காக்க வலியுறுத்தல் அதன் தலைக்கடன் அன்றோ!

பூவணம், ஆப்பனூர், ஏடகம், மதுரை முதலாய வையைக் கரைத் திருக்கோயில்களைப் பாடும் தேவாரங்கள் எப்படி இயல்கின்றன? 'வைகை' என்றே இயல்கின்றன? தேவாரப் பெருமக்கள் அப்படித்தான் கண்டனரோ? ஏடுபெயர்த்தோரும், பதிப்பித்தோரும் கண்டனரோ?

ஒரு குறிப்பு: தேவாரப்பாடல்:

"பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்
தையனை யடிபணிந் தரற்றுமி னடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே"

என்னும் பாடலில் இரண்டாமடி வையையின் எனவரல் இயல்பன்றோ? அதில் மாறியமைந்த வகையே ஏடுபெயர்த்தோர் செய்லைக் காட்டவல்லதாம்! இனித் தேவாரப் பாடல்களில் வைகை வருமிடங்களில் எல்லாம் 'வையை' எனநிற்க எத்தடையும் இல்லையாம்! பிற்காலத்தார் உள்ளத்தில் கிடந்த உணர்வு 'வையை'யை 'வைகை' யாக்கிற்றாம்.

இனி, நம்பி திருவிளையாடலில் பெரும்பாலான இடங்களிலும் வையையே இடம்பெற்றுள்ளது. கழுவேறின திருவிளையாடலில் வரும் மெய்யுறக் கேட்டு எனத் தொடங்கும் பாடலில் 'வையை'மா நதியே வருகின்றது. மேலும், 'பொய்யா வையை' என்றும் சுட்டுகின்றது. அத் திருவிளையாடலில் வையையுடன் 'வைகை' என்னும் ஆட்சியும் ஈரிடங்களில் உள. 'வைகை' 'வேகவதி' என்பதன் மரூஉ என்று பதிப்பாசிரியர் பெரும்பேராசிரியர் உ. வே. சா. அவர்கள் குறிப்புரை வரைந்துள்ளார்கள். (நூல் வரலாறு. 6) இதனைக், 'கடுகிவரும் செய்தியாலே வேகவதி' என்றார் பரஞ்சோதியார். ஆனால், வேகவதி 'வைகை'யாகவில்லை; வையையே, வைகையாக்கப்பெற்றது என்பது தெளிவு.

பரஞ்சோதியார் திருவிளையாடல் பதிப்புகளில் 'வையை' உண்டா? 'வைகை' உண்டா? சங்கநூற் பயிற்சியும், வையையின் பழவழக்கும் தெளிய அறிந்தார் பதிப்பு 'வையை'யாகவே உள்ளது. ஏனையோர் பதிப்பு 'வைகை'யாக உள்ளது.

அகநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் இவற்றுக்கு உரை கண்ட நாவலர் நாட்டாரவர்கள் திருவிளையாடலுக்கு உரை கண்டார்கள். அவர்கள் பதிப்பில் பாட்டிலும் உரையிலும் வையை உண்டே ஒழிய வைகைத்தடமும் இல்லையாம்!

இனித் திருவிளையாடல் கதையை உள்ளடக்கிக்கொண்டு கிளர்ந்த திருவிளையாடல் பயகரமாலை, இலீலாசங்கிரக வத்தியாயம் என்பவையும் வையையைச் சுட்டுகின்றன. அவை வையையாகவே அமைகின்றன; பெருகுவிக்கும் வையை, வெள்ளமெல்லாம் (திருவிளையாடல் பயகரமாலை. 7) 'வைய்ய வடதீரம்' (24) 'பௌவ மெனப்பெருகும் வையை' (30) என்பன இலீலா சங்கிரக வத்தியாயம்.

'வைகைக்கு ஒரு விளக்கம். தொன்மப்படி (புராணப்படி) குண்டோதரன் நீர்வேட்கை தீர்ப்பதற்காக 'வைகை' என்றனராம்; வைகையாயிற்றாம்! வையை அணைக்கட்டுப் பூங்காவிலே இதற்கொரு காட்சியமைப்பு!

திரைக்காட்சியிலே ஓர் எள்ளல்: 'வை கை' என்றுதானே சொன்னான்; குடத்தை வை என்று சொன்னான்? என்பது.

பொருள் பொதிந்த* வையைப் பெயரை விடுத்து வைகையாக்குவதுதான் மொழித் தொண்டாகுமோ? கற்றறிவாளராவது இதனைக் கருதவேண்டாவா?

'அவர்க்கென் நன்றி!'

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

வானாகித் திகழ்கின்ற தமிழே எங்கள்
 வாழ்விலிரு விழிகளென விளங்குந் தாயே;
ஊனாகி உயிராகி உணர்வு மானாய்;
 உலகமுதல் மொழியென்னும் நிலையு மானாய்;
தேனாகித் தவழ்கின்ற இன்ப மெல்லாம்
 தோற்கும்வகை செழும்பாடல் கோடி ஈன்றாய்;
கானேகிக் கடுந்தவங்க ளியற்றுவோரும்
 கைவிடாத தொருபொருளு மானாய் வாழ்க!

கூனாகிக் குள்ளமனங் கொண்ட சில்லோர்
 கோபுரத்தில் வடமொழியை ஏற்றி வைக்க
வீணாக வெறுங்கூச்ச லிட்டார் பின்னும்
 வேதநெறி ஆகமமே சாட்சி யென்றார்:
ஏனோதான் இதைச்செய்தார் அன்னார் வீணே
 ஏமாற்ற நினைத்ததெல்லாம் மாற்ற மாகித்
தானாக மெய்த்தமிழர் தலைநி மிர்ந்தே
 தன்மானம் பெறச்செய்த அவர்க்கென் நன்றி.

*'வையைவளம்' என்னும் பெயரிய கழகவெளியீட்டில் காண்க.

சங்க நூல்களில் உன்னமும் ஆவிரையும்

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

உன்னம்: ''அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து

—பதிற்றுப்பத்து 23 : 1-2

''தார்மிகு மைந்தி ஞர்முடிச் சேரல்
புன்கா லுன்னஞ் சாயத் தெண்கள்
வறிதுகூட் டரிய விரவலர்த் தடுப்ப''

—பதிற்றுப்பத்து 40 : 16-18

''பொன்னெ னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ''

—பதிற்றுப்பத்து 61 : 5-6

''திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை'' —புறம். 3 : 22-23

சங்க நூல்களில் நான்கே பாடல்களில்தான் உன்னம் என்றொரு மரம் கூறப்பட்டுள்ளது. பொன்னைப் போன்ற நிறத்தையுடைய பூவையும் சிறிய இலைகளையும் பொலிவற்ற அடிமரத்தையும் உடைய உன்னமரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உன்னமரம் சிறிய மர மாகவோ, செடியாகவோ இருக்குமென்று அறிவியலார் கூறுவர். பூ மஞ்சள் நிறத்தில் இருக்குமென்று கூறுவர்.

உன்ன மரத்தைப்பற்றி ஓர் அரிய, எளிதில் நம்ப முடியாத செய்தி பதிற்றுப்பத்திலும் புறப்பொருள் வெண்பா மாலையிலும் தொல்காப்பியத்திலும் கூறப்பட்டுள்ளது. 'உன்னம் சாயவென்றது தன்னொடு பொரக் கருதுவார் நிமித்தம் பார்த்த வழி அவர்க்கு வென்றியின்மையைக் கரிந்து காட்டவென்றவாறு' என்று பதிற்றுப் பத்து 40ஆம் பாடல் பழைய உரை கூறுகின்றது. பதிற்றுப்பத்து 61 ஆம் பாடல் உரையிலும் உன்னமரத்துக்குப் பகைவனாகிய எம்முடைய அரசன் என்று உரை கூறப்பட்டுள்ளது. புறநானூறு மூன்றும் பாட்டிற்குக் கூறிய அடிக்குறிப்புரையில் உன்னம் போர் செய்வோர் நிமித்தம் பார்த்தற்குரிய மரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க—மன்னரு

> மீடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
> கோடெலா முன்னங் குழை"

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறியுள்ளது.

உன்னமரம் பகைவர்க்கு வெற்றியில்லை என்பதை நிமித்தமாக. குறித்துக் கரிந்து காட்டியதாகக் கூறிய செய்தி நம்பத்தகாதது போலத் தோன்றும். இயற்கையில் உன்னமரத்தின் இலைகள் ஆண்டுதோறும் வறண்டுபோய்க் கரிந்து காணப்படும். பின்னர் புதுத்தளிர்கள் தோன்றும். இத் தன்மை உன்னமரத்தின் தனித் தன்மை என்று செடிநூலார் கண்டு கூறியுள்ளனர். உன்னமரத்தின் இலைகள் ஆண்டுதோறும் வறண்டுபோவதால் கரிந்து காட்டுவது இயற்கையேயாகும். இந்த இயற்கை நிகழ்ச்சியையே போரிடும் போது ஒரு நிமித்தமாகக் கொண்டுள்ளனர். புறப்பொருள் வெண்பாமாலையில் 'கோடெலாம் உன்னங்குழை' என்றதால் உன்னம் தளிர்த்துக் காட்டினுல் வெற்றி கிட்டும் என்று நல்ல நிமித்தமாகக் கருதப்பட்டது தெரிகின்றது. உன்னநிலை என்னும் துறைக்குத் தொல்காப்பியத்திற்கு உரை கூறிய நச்சினர்க்கினியர் விளக்கம் கொடுத்துள்ளார். 'வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வென்றி கொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக் கோடு பொதுளுகவெனவும் பகைவேந்தற்கு ஆக்கமுளதெனின் அக்கோடு படுவதாகவெனவும் நிமித்தம் கோடல்' என்று தொல்காப்பியப் புறத்திணை (5) சூத்திரத்திற்கு நச்சினர்க்கினியர் கூறிய உரையைக் கவனிக்க வேண்டும். ஆதலின் உன்னமரம் துளிர்த்தலையும் இலைகள் வறண்டு கரிந்து போதலையும் போரின்கண் நிமித்தமாகக் கொண்டது தெரிகின்றது.

உ. வே. சாமிநாதய்யர் எழுதிய அடிக்குறிப்பில் உன்னம் இலவமரமென்பது மலைநாட்டு வழக்கென்பர் என்று கூறியுள்ளார். ஆனுல் சங்க நூல்களில் கூறப்பட்ட உன்னம் இலவமரமன்று. தற்போது மலையாள மொழியில் ஒருவகைக் காட்டிலவத்தை உன்ன மரம் என்றழைப்பதுண்டு. சங்க நூல்களில் கூறப்பட்ட உன்ன மரத்தை இன்றும் தமிழ்நாட்டில் பாமரமக்கள் 'உனூ' 'உன்னு' என்றழைக்கின்றனர். இந்த மரத்தைப்பற்றிச் செடி நூலில் A small tree reaching 25 feet height, the leaves usually dying blue and black என்று கூறப்பட்டுள்ளது, உன்னம் சிறு மரமென்றும் அதன் இலைகள் சில காலத்தில் இயற்கையாகக் கரிந்து காணப்படும் என்றும் கூறியதைக் காணலாம். உன்னமரத்தை Premna Latifolia என்று செடி நூலில் அழைப்பர்.

ஆவிரை :

சங்க நூல்களில் ஆவிரை என்ற செடி கூறப்பட்டுள்ளது.

"பொன்னே ராவிரை புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமா" —குறுந்தொகை 173

"மூளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வன்ன மார்பின் வனமுலைத் துயல்வர"
—அகநானூறு 301

"மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்துயாத்து
....
....
பூளை பொலமலர் ஆவிரை வேய்வென்ற
தோளாள் எமக்கீத்த பூ" —கலித்தொகை 13 : 7, 18

"அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் எவ்வநோய்"
—கலித்தொகை 139

"அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி"
—கலித்தொகை 40

"பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்"
—தொல்காப்பியம். எழுத்ததிகாரம் 283

ஆவிரை என்றொரு செடி சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. இதை இக்காலத்தில் ஆவாரஞ்செடி என்று கூறுவர். எளிதாகக் காணக் கூடியது இது. களர்ப்பாங்கான நிலத்திலும் வறட்சியான இடங்களிலும் நன்கு வளரும். பலரும் பார்த்திருப்பர், கழிகாமங்கொண்ட தலைவன் மடல் ஏறுவதைக் கூறும்போது, மயிற்பீலி, பூளை வேருடன் ஆவாரம் பூவைச் சேர்த்து கண்ணி சூடிக் கொண்டதைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். ஆவிரையின் பூ பொன்னிறத்துடன் பளிச்சென்று தென்படும். ஆதலின் 'பொன்னே ராவிரை' என்று அழைக்கப்பட்டுள்ளது. பொன் தகடுபோல பூப்பதை அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி என்ற கலித்தொகைப் பாட்டுவரி குறிப்பிட்டுள்ளது. ஆவிரைப் பூவை மடலேறும்போது எருக்கம் பூவுடனும் பூளைப் பூவுடனும் கண்ணியாகக் கட்டி மடலேறுதல் தான் பெரும்பாலும் கூறப்பட்டுள்ளது. ஆவிரம் பூ தீயின் விளக்கம் போலக் காணப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. 'களரியாவிரை' என்றும் அழைக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். பெரும்பாலும் ஆவிரஞ் செடி களர் நிலத்தில் காணப்படுவதால் இவ்வாறு

கூறப்பட்டுள்ளது என்று கருதலாம். 'களரியாவிரை' என்றொரு நூல் மறைந்துவிட்டதாகக் கூறுவர். மணிமிடை பவளம் போலத் தொகுக்கப்பட்ட நூலாக இருக்கலாம். ஆவிரைச் செடி களரிலும் வறட்சி நிலங்களிலும் நன்கு வளரும் (a beautiful shrub bright yellow flowers growing on dry stony places) என்று செடி நூலார் கூறுவர். ஆவிரையை அறிவியலில் (Cassia auricalata` என்றழைப்பர்.

பொழிந்தது மாமழை!

[மு. ரா. பெருமாள் முதலியார்]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
என்று பாடினர் இளங்கோ வடிகளார்.
மாரி பொய்த்தால் ஊரில் உணவிலை :
உணவு கொடுத்தே உயிரை வளர்க்கும் .
மாமழை சிறிது சிறிதாய் மறுத்ததால்
சென்றமுன் ருண்டு சீரழி வுற்றோம்.
சென்னை நகரில் தெண்ணீர் இன்றி
மக்கள் பட்ட பாட்டினை மறுமுறை
எண்ணிப் பார்க்கவும் இதயம் நடுங்கும்.
இந்த ஆண்டும் எழிலி பொழியுமோ
இல்லையோ எனமனம் ஏங்கி ஏங்கி
மக்கள் மிகவும் வருந்திய நேரம்
வந்து பொழிந்தது மாமழை. ஆனல்,
மிகுந்த மழையால் வெள்ளம் பெருகி
ஊர்களும் பயிர்களும் அழிந்ததும் உண்மை.
நன்மையும் தீமையும் நல்கும் மழையை
அடக்கி யாள ஆகுமோ மனிதனுல் ?
தின்மை சிறிது நன்மையோ பெரிதென
மழையைப் போற்றுவர் மக்கள். அவர்களுள்
மாரியைக் கடவுளாய் மதிக்கும் உழவர்
விளைவின் பயனை வியந்து போற்றும்
பொங்கல் விழாவே பொருள்நிறை விழாவென
உணர்ந்து மக்கள் உள்ளம் மகிழ்ச்சியால்
பொங்குக என்று பொங்கலை வாழ்த்துவோம்
பொங்கலோ பொங்கல்! பொங்குக பொங்கலே!

தொல்காப்பியமும் விகுதிகளும்

[பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

(முன் இதழ் ௧௬௮ ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொல்காப்பியம் முழுவதும் ஆராய்ந்து நோக்கின் இவை வினையுடன் வரும் எனக் கருதுவதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி "வினையொடு வருமே" எனத் தொல்காப்பியர் திட்டவட்டமாகக் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

"னஃகான், ஒற்றே ஆடூஉ அறிசொல்"

போன்ற சூத்திரங்களில் காணப்படும் விகுதிகளையே வினையியலில் மீண்டும் தொல்காப்பியர் கூறிச் செல்லுவார். இவ்விகுதிகள் பெயர்களிலும் வரும் எனக் கொண்டால் வினையியலில் கூறியது போலவே பெயரியலிலும் இவ்விகுதிகள்பற்றிப் பேசியிருக்க வேண்டும் தொல்காப்பியர். அல்லது வினையியலிலும் பெயருக்குரிய உதாரணங்களைக் காட்டியாக வேண்டும் உரையாசிரியர்கள், அவ்வாறு காட்ட முடியாத நிலையில் இச் சூத்திரங்கள் வினைச் சொல்லைப் பற்றியே குறிப்பிடுகின்றன எனக் கருதலாம்.

வினைச்சொற்களில் இவ்விகுதிகளை வைத்து அவற்றின் திணை, பாலை நிர்ணயிக்க முடியுமேயன்றி, பெயர்ச்சொல்லில் நிர்ணயிக்க முடிவதில்லை. இளம்பூரணர் குறிப்பிட்டதுபோல் கொற்றன் என்ற சொல் உயர்திணையையும், அஃறிணையையும் குறிக்கும். எனவே திரிபின்றித் திணை, பாலைக் காட்டும் பண்பு வினைச்சொற்களுக்கே உண்டு.

ஒருசில பெயர்ச்சொற்கள் விகுதியால் திணை, பாலைக் காட்டுவதற்கு முடியுமாயினும் ஆயிரக்கணக்கான பெயர்ச் சொற்கள் எவ்வித விகுதியுமின்றித் திணை, பாலைக் காட்டும். பெயரில் திணை, பாலை அறிவது அவற்றின் விகுதியால் அல்ல என்பதும், அவை காட்டும் பொருளை அடிப்படையாகக் கொண்டது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. அவன் போன்ற சொற்கள் விகுதியால் ஆண்பாலைக் காட்டினும், "அகத்தியலிங்கம்". "மீனாட்சி", "காமாட்சி" போன்ற ஆயிரக்கணக்கான சொற்கள் ஈற்றினால் அல்லது விகுதியினால் திணையைக் காட்டுவதில்லை. இதனால்தான் பெயரியலில்.

"இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான" (646)

எனக் கூறிப் போந்தார். இதற்கு உரை எழுதப் போந்த பலவேறு உரையாசிரியர்களும் பலபடக் கூறிச் செல்லுவதைக் காணலாம்.

இளம்பூரணர் அவன், பெண்மகன், சாத்தன் என்ற னகர ஈற்றுச் சொற்களைக் காட்டி இவை முறையே ஆண்பாலையும். பெண்பாலையும், அஃறிணை ஆண்பாலையும் காட்டும் எனக் குறிப்பிடுவார். இதைப்போன்றே பலவேறு பால்களைக் காட்டும் னகர, இகர, உகர ஈறுகளைத் தந்து தன் நிலையை எடுத்துக் காட்டுவார். மேலும் "வினைச்சொற்போல் இன்ன ஈறு இன்னபாற்கு உரித்து எனப் பெயர்ச்சொல் ஈறு பற்றியுணர்த்த லாகாமையின், உரியவை உரிய என்றார்" எனக் கூறுவது இங்குக் கருதத்தக்கது. இதே நிலையைத்தான் பிற உரையாசிரியர்களிடமும் காணலாம். இது பற்றி விளக்கமாக ஆராய்ந்துள்ளார் சண்முகம் (1982).*

பெயரொடும் வரும் என்று எண்ணும் தெய்வச்சிலையார் ஈறுகளுக்குஉதாரணம் தரும்போது தடுமாறுகின்ற நிலையைக் காண்கிறோம். பகர இறுதிக்குப் பெயரில் உதாரணம் தர முடியாது. "பகர இறுதி அஃறிணைப் பெயரால்லது வாராது" எனக் கூறுவதும், ஒன்றன் பாலில் அது, ஒன்று, இரண்டு என றகரத்திற்கும், டகரத்திற்கும் எண்ணுப்பெயர்களைத் தந்து நிற்பதும் பன்மை காட்டும் ஆ, வ என்ற விகுதிகளுக்கு யா, வருவ என்பவற்றைக் காட்டுவதும் இவரது தடுமாற்றத்தினை உணர்த்தும். எண்ணுப்பெயர்களில் நான்கு, ஏழு போன்ற கு, ழு, இறுதிகளும் உள்ளன என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. இதைப் போன்றே வருவ என்பது வினையடியாக வருவ தாகும். இவ்வீறுகள் வினையில் மாத்திரமே வரும் என்று கொண்டால் இத்தகைய தடுமாற்றத்திற்கு இடம் இராது.

ஒருமை—பன்மை வரிசை முறை:

வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள்பற்றிக் கூறும்போது தன்மையிலும், அஃறிணையிலும் பன்மை விகுதிகளை முதலில் தந்து, பின்னர் ஒருமை விகுதிகளைத் தருவது வியப்பாகவே உள்ளது. தன்மையில் முதலில்,

"அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
........................"

---

*செ. வை. சண்முகம், "உரியவை உரிய பெயர்வயி னான" ஆய்வுக்கோவை IV, 79-84. 1982.

……………………
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (687)

என முதலில் பன்மை விகுதிகளைத் தந்து அதன் பின்னரே

"க ட த ற என்னும்,
……………………
……………………
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே" (688)

எனக் கூறுவதும், இதே போன்று அஃறிணையிலும்

"அ ஆ வ என வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை" (701)

என முதலில் பன்மையைக் கூறி அதன் பின்னர்

"ஒன்றன் படர்க்கை த ற ட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி யாகும்" (702)

என ஒருமையைக் கூறுவதும் நினைவுகூரத்தக்கது. ஆனல் முன்னிலை, படர்க்கை ஆண், பெண்பால் போன்றவற்றில் ஒருமையே முன்னர்க் கூறப்படுகிறது. இதன் காரணம் விளங்கவில்லை.

தொல்காப்பியத்தில் இவ்விகுதிகளின் வரவு:

தொல்காப்பியம் பால் காட்டும் பலவேறு விகுதிகளைப் பற்றிக் கூறினும் ஒரு சில விகுதிகளே அதன்கண் வந்துள்ளன. தன்மை ஒருமை விகுதிகளாகக் கு, டு, து, று, என், ஏன், அல் என்ற ஏழு விகுதிகளை அது கூறியிருப்பினும் இவற்றுள் எதுவும் தொல் காப்பியத்தில் காணப்படவில்லை. இது ஒரு குறையோ அல்லது தவறோ அன்று. ஒரு நூலின்கண் சொல்லப்படும் எல்லா இலக்கணக் கூறுகளுமோ அல்லது எல்லா உருபுகளுமோ அந்த நூலில் வர வேண்டிய அவசியம் இல்லை. ஆசிரியர் எழுதுவது முழு மொழிக் குரிய இலக்கணமேயன்றித் தம் நூலுக்குரிய இலக்கணமன்று. ஆனல் அவர் நூலில் வந்து அதுபற்றி அவர்தம் நூலில் குறிப் பிடாமல் இருந்தால் அது குற்றமாகும். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியத்தில் 'கு' வந்து தன்மை ஒருமை விகுதியாக அது குறிப்பிடப்படாமல் இருந்தால் அது ஒரு சிறந்த இலக்கணம் ஆகாது.

எனினும் நம்மால் எழுதப்படும் இலக்கணங்களில் எல்லாவற் றையும் சொல்லிவிட முடிவதில்லை. காரணம் மொழி என்பது பரந்து பட்ட ஒன்று. ஆனல், இலக்கணங்களோ அவ்வாறு இல்லை.

அதனால்தான் மொழிகளுக்குப் புதிய புதிய இலக்கணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. புதுப்புதுக்கொள்கைகள் உரு வாக உருவாக மொழிகளில் காணப்படும் சிக்கல்கள் தெளிவா கின்றன. எனவே சிக்கல்கள் நிறைந்த மொழியின் எல்லாப் பண்பு களையும் எந்த இலக்கணமும் முழுமையாகச் சொல்லமுடியாது. பாணினிக்குப் பின்னரும் பல இலக்கணங்கள் சமஸ்கிருத மொழிக்குத் தோன்றியுள்ளன. இதுபோன்ற எத்தனையோ இலக்கணங்கள் ஆங்கில மொழிக்கும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. எனினும் ஆங்கில மொழியில் உள்ள எல்லா இலக்கணக் கூறுகளுக்கும் முழு மையான விளக்கம் வெளி வந்துவிட்டது எனக் கூறமுடியாது. இலக்கணியின் இலக்கணக் கொள்கைகள் புதிதாக உருவெடுக்கும் போதெல்லாம் புதிய விளக்கங்கள் தோன்றும். எனவே இலக்கணம் எழுதுதல் என்பது ஓர் ஓய்வு ஒழிவு இல்லாத மனித சமுதாயத்தின் செயலே ஆகும். உலகம் உள்ளவரை, அறிவு வளர வளரப் புதிய புதிய இலக்கணங்களும், கொள்கைகளும் வந்துகொண்டே இருக்கும். இந்நிலையில் எந்த இலக்கணமும் அது எந்தக்காலத்தில் எழுதப்பட் டிருந்தாலும் முடிவான முழுமையான இலக்கணம் ஆகாது. இதற்குத் தொல்காப்பியமும் விதிவிலக்கன்று.

ஈழத்தைக் காப்பதெந்நாள் ?

வட்டமேசை மாநாடாம்! வாய்கிழியப் பேசுகின்றார் !
வாய்ப்பேச்சு நடக்கையிலே வாள்வீச்சும் நடக்குதங்கே!
வட்டமிட்டு மேலோர்கள் வாதிடும் போதினிலே
திட்டமிட்டுச் சிங்களவர் தீந்தமிழர் தம்மை
வெட்டி வெட்டிச் சாய்க்கின்ற வேதனையை என்னென்பேன்?
பட்டதெல்லாம் போதாதா, பாரதத்தில் சமரசமா?
வட்டமிடும் பருந்துகளாம் வல்லரசு கட்கஞ்சி
குட்டக்குட்டக் குனிவதுதான் கோரும் சமரசமா!
எட்டப்பர் பலர்இங்கே இருந்துநமை ஏய்க்கின்றார்
கொட்டம் அடிக்கின்றான் சிங்களவன் அங்கே
தட்டியே கேட்பதற்கோர் தன்னாட்சி இல்லைஇங்கே
இட்ட தெல்லாம் சட்டமென இயம்புகின்ற பாரதமும்
இட்டமுடன் படையனுப்பி ஈழத்தைக் காப்பதெந்நாள்?

—நாகை. வேலன்

புத்தாண்டுச் சிந்தனை : குறிக்கோள்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

இன்று பொழுது விடிகின்றபொழுதே, 'புதிய ஆண்டு இதோ பிறந்துவிட்டது' என்று கட்டியம் கூறியபடியே கதிரவனின் பொன்னொளி கீழ்த்திசையில் பளிச்சிடும் புதுமையை நிச்சயமாகக் கவிதை உள்ளம் கொண்டவர்கள் கண்டிருக்க முடியும்; ஆம்; உலகில் புதுமை என்றாலே இன்பந்தான். பழைமை நம்மைவிட்டு விலகுகின்றது; புதுமை புன்னகை செய்துகொண்டே மலர்கின்றது; அந்த மலர்ச்சிதான் மன நிறைவை எவ்வளவு விரைவாகத் தோற்றுவித்து விடுகின்றது! உலகையே அழகுமயமாக்கி விடுகின்றது புதுமை; சோம்பிக் கிடந்த இருட்டு மெல்ல மெல்ல மறைகின்றது; இன்பமும் எழுச்சியும் ஊட்டும் கிளர்ச்சியுடன் புதுமை இருகரங்கள் நீட்டி வரவேற்கின்றது! களைத்த மனத்திலே புதிய தெம்பும் உற்சாகமும் நீர் ஊற்றாய்ப் பொங்கி வழிகின்றன! ஆம்; ஒவ்வொரு நாளும் இப்படித் தானே தொடங்குகின்றது! இதோ, இன்றைய நாளை எடுத்துக் கொள்ளுங்களேன்! நேற்றுவரை நம்முடன் இருந்த பழைய ஆண்டிற்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, இன்று, புலரும் பொழுதிலே பூபாளப் பண்ணிசைக்கும் கதிரெழுங் காலைப்பொழுதிலே புதிய ஆண்டிற்கு வரவேற்புக கொடுத்துக்கொண்டிருக்கிறோம்; ''புதிய ஆண்டே! வா! எங்கள் வாழ்வில் இன்பம் ஊட்ட வா! மகிழ்ச்சியும் மன நிறைவும் எம் வாழ்விலே பெருகிட வழிகாட்ட வா! நேற்றைய பொழுதின் அலுப்பும் சலிப்பும் கற்பூரமாய்க் கரைந்து போயின! உழைத்து உழைத்துப் பயன் கிட்டாமற் சலித்துக்கொண்ட அடிமனத்திலே புதிய ஊக்கத்தைத் தந்து கிளர்ச்சி ஊட்ட வா! மலரும் இந்தப் புதிய ஆண்டிலே—நீ எமக்குத் தரப்போகின்ற ஊக்கமும் ஆக்கமும் இதோ எம் கண்முன் விரிகின்றன? எம் முன்னே இருக்கும் இமாலயப் பெருமுயற்சிகள் முறுக்கேறிய எம் தோளாற்றலால் நிறைவுபெறப் போகின்றன; எம் முன்னே கங்கையாற்று வெள்ளமாய்—காவிரியாற்றுப் பெருக்காய் எமது கனவுகள் அனைத்தும் நனவுகளாகப் போகின்றன!

"வறுமை உற்றுக்கிடக்கும் எம் ஆயிரமாயிரம் தோழர்கள் வாழ்வில் கடும் உழைப்பால் செல்வம் கொழிக்கப் போகிறது!'' என்ற நம்பிக்கை ஒளி நம் நெஞ்சத்தடத்திலே செந்தாமரையாய்ப் பூக்கிறது! பரந்து விரிந்த இந்தப் பாரதத் திருமண்ணிலே—நம் தாயகத்தின் மடியிலே நம் குறிக்கோளை நினைக்க வந்தது இந்தப் புதிய ஆண்டென்று மகிழ்ச்சிப் பண் பாடுவது மட்டும் போதுமா? அந்த மகிழச்சிப்

பண்ணிற்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டாமா? அதைத்தான் இந்தப் புத்தாண்டுச் செய்தியாக—சிந்தனை விருந்தாக நேயர்களுக்குப் படைக்க விரும்புகின்றேன்.

இன்று பெரும்பாலோருடைய வாழ்வு இயந்திர மயமாக மாறி விட்டதென்று நான் கூறினால், இதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். நண்பர்களே! ஆம்; எழுவதும், கடமைகளைக்கூடக் கருத்தூன்றிச் செய்யாமல் ஏதோ நினைவுடன் ஆற்றுவதும், தன்னல நோக்குடன் எதையும் காண்பதும், மீண்டும் படுக்கைக்குப் போவதுமாக மனித இயந்திரங்கள் நடமாடும் மண்ணாக இந்தப் புண்ணியபூமி விளங்க லாமா? ஒரு விநாடி சிந்தியுங்கள்!

'தமக்கென்று முயலாத முயற்சியையும் பிறர்க்கென்று வாழும் பெருந்தன்மையையும் உடையவர்களாலேயே இந்த உலகம் நிலைத் திருக்கின்றது'—என்கின்றானே புறநானூற்றுப் புலவன்! அச் செம் மொழிகளைச் சற்றுச் சிந்தனை செய்யுங்கள்! தன்னலம் ஒன்றே கருதும் நெஞ்சு ஒரு குறுகிய வட்டத்துக்குள் தன்னை அடக்கி முடக்கிக் கொண்டுவிடுகிறது ! ஆனால் பிறர்க்காக என்று எதையும் எண்ணும் பார்வை—உலகு தழுவிய பார்வை—சமுதாயம் தழுவிய போக்கு 'திரிவிக்கிரமாவதாரம் எடுத்த திருமாலைப் போல' அல்லவா கடல் கடந்தும், மொழி கடந்தும், நிறம் கடந்தும், இனம் கடந்தும் விரி கின்றது! அந்த 'விசுவரூப தரிசனம்' அல்லவா நம் வாழ்வென்னும் வேள்விக்கு உரிய பயனாக இருக்கமுடியும்!

எதைச் செய்தாலும் அதனால் தனக்கு என்ன வரும் என்று எண்ணும் 'வாமன நிலை' மாறி, இதனால் அனைத்துலக மனிதனுக்கு வரும் நலம் என்ன என்று கருதும் மனப்பண்பாட்டை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்தப் பண்பாடு வளரும் புலமாக நம் வாழ்வை உருவாக்க வேண்டும்! அந்த விழைவு ஆழமாக நம் மனத்தில் வேர் ஊன்ற வேண்டும்! அதற்குத்தான் இதுபோன்ற நாட்களில் நம் சிந்தனையைத் துலக்கித் துப்புரவு செய்து புது ஒளி பாய்ச்சுவது நம் கடனாகின்றது !

வாழ்க்கையென்றால் அதற்கு ஓர் இலக்கு வேண்டும்; பெறு தற்கு அரிய வாய்ப்பு நம் வாழ்க்கை; இலக்கு. ஒன்று அமைத்துக் கொண்டு, அந்த இலட்சியப் புள்ளியை நோக்கி நடக்காமல், மனம் போனபடியெல்லாம் வாழ்ந்து இந்த வாய்ப்பை வீணடித்து விடக் கூடாது.

"பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்"

என்று அப்பரடிகளார் பாடுவது அவரை நோக்கியென்று நினைக்கிறீர்கள்? இல்லை; வாழ்க்கையை இலட்சியம் இல்லாமல் வீணாக்குவோரை நோக்கியே அடிகளார் பாடிய வரிகள் இவை.

ஆம்; சான்றோர்கள் இதைத்தானே சூத்திரங்களாக ஒற்றை வரிகளில் ஓதியிருக்கிறார்கள்! காப்பியங்களாகப் பல்லாயிரம் பாடல்களில் கூறுகின்றார்கள்! எந்த மொழியாயிருந்தால் என்ன? கவிதையை இதற்குத்தானே பயன்படுத்தி யிருக்கிறார்கள்!

கவிஞர்களைச் சுதந்திர தேவதைகள்! (Poets are literating Gods) என்று வருணிக்கும் எமர்சனின் கருத்தை அறிவுடையுலகம் மறந்துவிடுமா? கவிதை என்பதே உயர்ந்த வாழ்க்கை நிலையின் சிறந்த காட்சி (Poetry is a representation of the ideal) என்று வரையறை செய்யும் நியூமனின் வாய்மொழிதான் எத்துணை இனியது! எந்தக் கவிதையாயிருந்தாலும் அது இலக்கினை எடுத்தியம்பாத வரையில் சிறப்புடையதன்று என்பதைச் சிந்தனை செய்ய வேண்டும். தனிக்கவிதை மட்டும்தானா குறிக்கோளைச் சுட்டுகின்றது! காப்பியங்கள் பாவிகமாக எடுத்துரைக்கும் உயர் பண்பு அன்றோ அவற்றின் கொடுமுடி!

உடலெங்கும் உயிர் பரவியிருப்பது போலக் கதையில், அல்லது கவிதைப்பின்னலில் அமைந்துள்ள உயிரமைப்பு அன்றோ பாவிகம்! பிறனில் விழைவோர் சுற்றத்தோடும் கெடுவர் என்ற குறிக்கோளன்றோ இராமகாதைப் பாவிகம்! வாய்மை எனப்படும் சத்தியமே வெற்றிகாணும் கூரிய படைக்கலம் என்ற குறிக்கோளன்றோ அரிச்சந்திரன் திருக்கதைப் பாவிகம்! செய்தற்கு அரிய செயல்களைச் செய்யும் செம்மல் உள்ளம்தான் பெரியவர் சிறப்பு என்று பேசுவதன்றோ பெரியபுராணப் பாவிகம்!

நமது அறிவுப்பார்வைக்கு இந்தக் குறிக்கோளின் கூர்மை புலனாக வேண்டும். இல்லையென்றால் நம்முடைய இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டு வாழ்வும் பொருளற்றன என்று ஆகிவிடும். இந்தப் புதிய ஆண்டில், அமைதியான நம் உள்ளத்தில் புதிய ஆற்றலோடு இந்தக் குறிக்கோள் பதியட்டும். இதுவே இந்தச் சிந்தனையாளனின் இன்றைய பணிவான வேண்டுகோள்.

———

ஆவின் பாலிற்கும் குழந்தைக்கும் சிலேடை

பாலாடை ஏற்க பலகால்நீர் கொள்ளுதலால்
மேலாடை நீக்கி மடுத்தலினால்—காலத்தால்
அப்பால் திரிதலால் ஆப்பை உறுதலினால்
ஒப்புமா பால்குழவி யோடு.

மூவரையன், தஞ்சை

சிவ வழிபாட்டில் அஞ்செழுத்து

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

அஞ்செழுத்தின் அருமை அறியாத சிவனடியார் எவருமிலர். சிவாய நம அல்லது நமசிவாய என்னும் மந்திரம் (அஞ்சக்கரம்) தமிழா வடமொழியா என்னும் ஐயப்பாடு பலர்க்கும் எழுவது இயல்பே. மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் இதனை ''சிவ போற்றி'' எனத் தமிழ்ப்படுத்தலாம் என்று கூறியுள்ளது ஏற்கத் தக்கதே எனினும், சிவநெறிச் செம்மல் முருகவேள் அவர்கள் மந்திர எழுத்துகள் தமிழே என்று 'தமிழ் ஞானசம்பந்தர்' என்னும் நூலில் தெளிவு கொளுத்தியிருக்கிறார். 'நம' என்னுஞ்சொல் வடமொழியில் வணங்கற் பொருளில் இருப்பதும் 'சிவாய'—சிவனுக்கு என யகர விடைச் சொல் வடமொழியில் நான்கனுருபாக இருப்பதும் இம் மந்திரம் முற்றிலும் வடமொழித் தொடர் எனத் துணிய இடங் கொடுத்துவிட்டது. மந்திர மொழிகள் முற்றும் விளங்கும் சொற் றொடர்களால் அமையா என்பதும் பல சொற்களின் முன்னெழுத்துக் கூட்டாகவோ, மந்திர ஆற்றல் வாய்ந்தன இன்னின்னவை எனத் தெரிந்தெடுக்கப்பட்ட எழுத்துகளின் கூட்டொலிப்பாகவோ இருக்கும். இஃதறியாது, சிவனுக்கு வணக்கம் என்று பொருள்படுவதாக வுரைப்பது சிறிதும் ஏற்கத்தக்கதன்று.

எம்மொழியிலும் மந்திரம் ஓதுவாரை உற்று ஆய்ந்தால் மூலமந்திரம் எழுத்தல் ஓசைகளும் பொருள்தரும் சொற்களல்லாத மந்திர எழுத்தோசைகளின் புணர்ப்பாகவுமே இருப்பதை அறியலாம். ஓம், ரீம், கிறீம் என்னும் ஓசைகள் இத்தகையனவே. இசைத் தமிழில் 'தானே தன்னனே……ஏலேலோ' என்னும் வண்ணக் குழிப்புகள் ஓசையினிமை மிகுவிப்பதுபோல மந்திர எழுத்துகள் வழிபாட்டில் வலிமை சேர்க்கும் ஆற்றலின என்று கருதப்பட்டது.

அவை எழுத்தோசைகளேயன்றிச் சொல்லாகா. சிவாய நம என்பது சிவனுக்கு வணக்கம் என்று பொருள்படும் தொடராயின் சிவமந்திரம் என்றல்லது திருவைந்தெழுத்து (பஞ்சாட்சரம்) என்று வழங்கார். அவை சொல்லாகப் புணர்க்கப்படாத தனித்த மந்திர எழுத்துகளின் கூட்டொலிப்பாக இருத்தலால் திருவைந்தெழுத்து (அஞ்செழுத்து) எனத் தொன்றுதொட்டு வழங்கப்பட்டுவருகிறது. நாராயணாய நம, சூர்யாய நம, சந்திராய நம என்பன போற்றித் தொடர்கள். அங்ஙனம் 'சிவாய நம' பொருள் கொள்ளத்தக்க தன்று.

வடமொழியாளர் அச்சப்பொருள் தரும் 'நாம்' என்னும் தமிழ்ச் சொல்லின் வினைத்திரிபான 'நம்' (அஞ்சுதல்) என்பதையே வணங்கற் பொருள்தரும் வடசொல்லாக்கிக் கொண்டனர். அது முற்றிலும் தமிழ்வேரிலிருந்து கிளைத்த சொல் என்பதை அவர் அறியார். சிவ வழிபாடு குமரிக் கண்டத்தில் தோன்றியது. சிவன் 108 தாண்டவங்களை ஆடிக்காட்டிய மாவிந்தமலை (மயேந்திரம்) குமரிக் கண்டத்தில் குமரிமலைக்கு மேற்கில் இருந்தது. சிவ வழி பாடும் சிவநெறி விளக்கும் தமிழ் ஆகமங்களும் சிவாய நம எனும் திருஐந்தெழுத்தும் தோன்றிய தொன்முது காலத்தில் ஆரியர் இந்தியாவுக்குள் காலடி எடுத்துவைக்கவில்லை. சிந்துவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடிருந்ததை யாவரும் அறிவர். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபிறகு தோன்றிய சமற்கிருதத்தில் உள்ள நான்காம் வேற்றுமை உருபு 'ய' சிவாய நம என்னும் மிகப் பழைய மந்திரத்தில் புகுந்திருக்கவே முடியாது. திருவைந்தெழுத்திலுள்ள யகரமும் வடமொழி நான்கன் உருபு யகரமும் ஒன்று போலக் காணப்படுவது ஆண்டர்சன் என்னும் ஆங்கிலப் பெயரும் அன்பரசன் என்னும் தமிழ்ப் பெயரும் ஒன்றுபோல ஒலிப்பதை யொத்த ஏதிலி ஒப்புமையே. மேலையாரிய மொழிகள் எவற்றிலும் தமிழ் எழுத்தின் ஒலிப்பான 'ச' (சகரம்) இல்லை. ஆங்கிலம், இலத்தீனம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் உள்ள S (ஸகரம்) வடமொழி 'ஸ' எழுத்தாக இருப்பதை ஒப்பிட்டு நோக்குக. வடமொழியாளர் தமிழிலிருந்தே சகர எழுத்தைக் கடன் பெற்றனர்.

SXSL நெட்டுயிரும் மெல்லின மெய்யுமாகிய ஓம் என்னும் மந்திர ஒலி மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்று மேலையர் ஆய்வு செய்தறிந்திருப்பதாகக் கூறுகின்றனர். 'சிவாய நம' என்னும் மந்திர ஒலியில் முதலெழுத்து வல்லின ஒலியிழந்து அரையுயிர் இடையின ஒலிகளைச் சார்ந்து நம என்னும் மெல்லின ஒலியில் இறுதலால் வன்னெறி சாரா நன்னெறிப் பாற்படுத்து மனத்தை இடையரு அமைதியில் (சாந்தம்) ஆழ்த்த வல்லதா என்பதை அத்தகு வல்லுநர் ஆய்ந்து நிறுவ முன்வரவேண்டும்.

ஒற்றைத் தலைவலிக்கு மருந்து

மிகத் துன்புறுத்தும் ஒற்றைத் தலைவலிக்குச் சித்த மருத்துவத்தில் எளிய மருந்தொன்று உள்ளது. சாமந்திப் பூச் செடியின் இலைகளில் இரண்டு கொண்டு வந்து, அதிகாலையில் வெறும் வயிற்றில் ஒரு நாளைக்கு ஒருவேளை வீதம் இரண்டு அல்லது மூன்று நாள் உட்கொண்டு வந்தால் இத் தலைவலி நீங்கும் என்று மருத்துவர் ஆர். தியாகராசன் கூறுகிறார்.

நன்றி : தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஆ (பசு)

[நா. எழில்—மகிழ்நன்]

ஓரெழுத்து ஒருமொழியான 'ஆ', பன்னெடுங் காலத்திற்கு முன், விலங்காண்டியாய்த் திரிந்த மாந்தன் முதற்கண் ஆவினை வளர்க்கவும் : அதனினின்று பால் பெற்று, அதைக்கொண்டு தயிர், வெண்ணெய் முதலியன பெற்று அவற்றைத் தன் உணவாக்கிக் கொள்ளவும் பழகியிருந்தான். முதன்முதலில் அவன் வளர்த்துப் பழக்கிய விலங்கு 'ஆ' எனின் அது மிகையன்று.

[1]"ஆ என்பது மா என்பதன் மெய்நீக்கம். மா என்று கத்துவது மாவெனப்பட்டது. மா—மான்—மாடு. மா என்பது னகர மெய்யீறு பெற்று ஆவிற்கினமான மானை உணர்த்திற்று".

ஆகவே, ம்+ஆ=மா. மாந்தன் (மனிதன்) முதலாவதாகத் தன் ஊ வளர்ப்பில் ஆவை வளர்த்ததனுல், மா (விலங்கு) என்ற எழுத்தே எல்லா விலங்குகளையும் குறிக்கும் பொதுச்சொல்லாயிற்று. இதனைத் தொல்காப்பியம், "தெய்வம் உணுவே மா மரம் புள்பறை" (அகத்—18) என்று கருப்பொருள்பற்றிக் கூறும்போது குறிக் கின்றது. இதற்கு உரை எழுதப் போந்தார் அனைவரும், மாவிற்கு விலங்கென்றே பொருளெழுதினர். மேலும் மரபியல் 12ஆம் நூற்பா உரையில் பேராசிரியரும் மா என்பது, "குதிரையும், யானையும், புலியும், அரிமாவும் (சிங்கமும்) முதலியவற்றிற்கெல்லாம் பெயராகலின்" என உரை எழுதியுள்ளார்.

'ஆ' என்பது னகர மெய்யீறு பெற்று ஆன் என்ருகி, அஃதும் ஆவைக் குறித்தது. ஆக்களின் கூட்டத்தைப் பாதுகாப்பவன் ஆயன் எனப்பெற்ருன்.

அர் என்ற சிறப்பு விகுதிபெற்று ஆயர் என்ருயிற்று. இந் நாளில் இடையர் இனத்தைச் சுட்டுகின்றது. "இடையனில் ஆண்டியுமில்லை, குயவனில் தாதனுமில்லை" என்பது பழமொழி. கலித்தொகை (104: 68) "துற்றீயாள் ஆயர் மகள்" என்று குறிப்பிடுகின்றது. ஆயர்கள் இன்றைக்கும் ஆடு, மாடுகளை வளர்த்துச் சீருடன் வாழ்வினை நடத்தி வருகின்றனர்.

ஆமா என்றொரு விலங்கு பண்டைக் காலத்தில் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அவ் விலங்கு எங்ஙனிருக்குமென்று விளக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால், "ஆ போலும் ஆமா" (தொல்) என்று விளக்கினர். அஃதாவது அனைவரும் அறிந்த

---

1. ஒப்பியன் மொழிநூல்—பாவாணர்—பக். 198.

ஆவினைக் கொண்டு, அறியாத வொன்றான ஆமாவினை விளக்க வேண்டி, 'போலும்' என்ற உவமையுருபைப் பயன்படுத்தி விளக்கியுள்ளமை நோக்கற்பாலது.

மேலும், "கோ என்பதை ஆமா என்பவற்றோடு சேர்த்து, "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" (நன்னூல் 248) என்று பவணந்தியார் கூறியது தவறாகும். "கோ என்னும் பெயர் பெற்றத்திற்கு வழக்கற்றுப் போனமையின், கோன் என்பதின் ஈறுகெட்ட வடிவம், அரசனைக் குறிக்கும்போது மயக்கத்திற்கு இடமில்லை" என்று மொழிஞாயிறு பாவாணர் கூறுவதையும், அந் நூற்பா விளக்கத்தினையும் ஆழ்ந்து எண்ணல் வேண்டும்,

கோ என்ற சொல், ஆ என்னும் பொருளைத் தருமாறு, தமிழில் மிகையாக வழங்கவில்லை. 'ஆ' என்பதுடன் 'அன்' சேர்ந்து ஆயன் ஆனதுபோல, 'கோ' என்பதுடன் 'அன்' சேர்ந்து கோவன் ஆயிற்று. கோவன்—இடையன். 'கோவனிரை மீட்டனன்' என்ற சீவக சிந்தாமணி (455) அடியை நோக்குக. கோ என்பது செங்கோலாச்சும் அரசனையுங் குறிக்கக் கரணியம் யாதோவெனின், இடையன் மாட்டு மந்தையை மேய்ப்ப (காப்ப) தொப்ப, அரசனும் மக்கள் மன்பதையைக் கட்டியாளுதல் நோக்கியே யாமென்க. கோவன் என்ற சொல் அரசனைக் குறிக்கச் சான்றாக, "கோவனும் மக்களும்" (சீவக. 1843) என்ற அடியைக் கொள்ளலாம். கோவினைப் பாதுகாப்பதில் வல்லவன் என்ற பொருள்பட, கோவலன் என்ற சொல்லும் இடையனைக் குறித்தது,

ஒப்புநோக்க : பா—பாவலன். "பெரிய சூடிய கவர் கோற் கோவலர்" (அகநா. 264), கோ என்பதை மூலமாகக் கொண்டு, அவ்வினத்தாரைக் கோன், கோனார் என்றலுமுண்டு.

ஆவைக் குறிக்குஞ் சொல்லான பெற்றம் இக்கால் வழக்கற்றுப் போனாலும், அதன் மூலம் பெண்மையைக் குறிக்கும் சால்புடைத்து. 'பெள்' என்ற வேரினை மூலமாகக் கொண்டதே பெற்றம் என்ற சொல்.

பிள்—பெள்—பெற்றம்.

தொல்காப்பியர், "பெற்றமும் எருமையும் மரையும் ஆவே" (மரபியல்). ஆ என்ற அஃறிணைப் பெண்பாற் பெயர் பெற்றம், எருமை, மரை (மான்) என்ற மூவகை விலங்குகளுக்கும் ஒவ்வுமெனக் கூறியுள்ளார். ஆவினைப் பெற்றமென்பது தென்பாண்டி நாட்டார் வழக்கிலிருந்தது.

---

2. ஒப்பியன் மொழிநூல்—பாவாணர்—பக். 196.

விரைந்தோடும் ஆவினை அமைதிபடுத்த, ஆவ், ஆவ் என்கின்ற அமைதிபடுத்தச் சொல், இற்றைக்கும் சிற்றூர்ப் பகுதிகளில் வழங்கி வருகிறது, ஆவு என்பதன் கொச்சை வடிவம், 'ஆவ்' ஆகும். தெலுங்கில் ஆவினை 'ஆவு' என்கின்றனர்.

வழங்கிய சொல் வழக்கழிதல் என்ற முறைமையின் கீழ், ஆ என்ற சொல்லும், அதே பொருளைத் தருகின்ற கோ, பெற்றம் என்பனவும் அழிந்தொழிந்து, 'பசு' என்ற சொல் வழக்கிலுள்ளது. கழகக் கால இலக்கியங்களில் மருந்துக்குக் கூடக் கிடைக்காத, 'பசு, என்ற சொல்லையே பயன்படுத்தி வருகின்றோம். இதைக் கடிதே களைதல், கற்றறிந்தார் தம்தலைக் கடனெனக்கொண்டு, 'ஆ'வினை வழக்கிற்குக் கொணருதல் வேண்டும்.

திருவிளையாடற் புராண நிறைவு விழாவும் பெரியபுராணத் தொடக்க விழாவும்

பல்லாவரம் மறைமலையடிகளார் கலை மன்றத்தில், தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, சைவப் பிரசங்க மணி சண்டமாருத பிரசங்க ரத்னாகரம் ஆ. தி. அ. ஈசுவர் அவர்களால் நடத்தப்பெற்று வந்த திருவிளையாடற் புராணச் சொற்பொழிவின் நிறைவு விழாவும், அவர்களால் தொடங்கப்பெறும் பெரியபுராணச் சொற்பொழிவின் தொடக்க விழாவும் 29—1—84 அன்று மாலை மேற்படி கலை மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றன. வாழ்வியற் புலவர் தவத்திரு சொ. ர. தேமொழியார் விழாவிற்குத் தலைமை ஏற்றார். புலவர் காசி தனக்கோடி எம். ஏ., பண்டித நடேசனார். பி. ஏ., பேராசிரியர் குமாரி மு. இரகுபாய் எம். ஏ., பேராசிரியர் இராசகோபாலன் ஆகியோர் உரையாற்றினர்.

கூட்டத் தலைவர், தேமொழியார், சங்கச் செயலர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, கழக மேலாளர் திரு. ஆ. சுப்பையா மற்றும் சொற்பொழிவாற்றிய அனைவர்க்கும் திரு. ஈசுவரர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் நன்றி நவின்றார். கலைமாமணி சைதை நடராசன் அவர்களின் வாழ்த்துப் பாடலுடன் விழாக்கள் இனிது நிறைவுற்றன.

சிறப்புமிக்க ஆவுடையார் கோயில்

[தி. இராசமாணிக்கம், பொள்ளாச்சி]

"திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுந ரன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே"

என்பர் சிவப்பிரகாசர். "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்பது உலகவழக்கு, தீந்தமிழில் தித்திக்கும் திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப் பெருமானார் ஞானப்பேறு பெற்றதலம் திருப்பெருந்துறையாம். தற்காலத்தில் அது ஆவுடையார் கோயில் எனப்பெறுகிறது. இது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியினின்றும் 14 கி.மீ. தொலைவில் உள்ளது.

இங்குள்ள கோயில் பல்வேறு சிறப்புகளையுடையது. ஞாயிற்றின் ஒளி உயிர்கள் வாழ இன்றியமையாதது. காய்சினக்கதிர்ச்செல்வன் கிழக்கில் தோன்றுகின்றான். எனவே உயிர்களின் நல்வாழ்விற்காக அமைக்கப்பெறும் கோயில்கள் பொதுவாகக் கிழக்குநோக்கிக் கட்டப்பெறுகின்றன. ஆகமவிதிகளின்படி கோலவெண்ணீற்றான் கோயில் கிழக்கு, வடக்கு நோக்கி இருக்கலாம். இங்குள்ள கோயில் தெற்கு நோக்கி உள்ளது இதன் தனிச்சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

இறைவனது இயல்பை,

"இன்ன உரு இன்னநிறம் என்று அறிவதேல் அரிது"

என ஞானக் குழந்தையாம் சம்பந்தப் பெருமானும்,

"இன்ன உரு என்று அறி ஒண்ணாதான்"

என திருநாவுக்கரசுப் பெருமானும்,

"இன்னது என்று அறியாத
தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலை"

என்று மணிவாசகப் பெருமானும் அருளிச்செய்துள்ளனர். அவர்தம் திருவாக்குகளுக்கு ஏற்ப, ஏனைய கோயில்கள் போலன்றி இங்குள்ள கருவறையில் இறைவனின் திருவுரு இல்லை. ஆவுடையார் என்ற இருக்கைமட்டுமே உள்ளது. எனவே இது ஆவுடையார் கோயில் என வழங்கப்பெறுகிறது.

"மற்றவர்க்கு எல்லாம் தலைமையாம் பணியும்
மலர்கையிற் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்"

என்ற சேக்கிழார் திருவாக்குப்படி, நந்தியம்பெருமான் கயிலை மலையைக் காப்பவர், எனவே கந்தம் கமழ் கொன்றையான் கோயில் வாயிலில் இவர் அமைக்கப்பட்டு, "அதிகார நந்தி" என்று அழைக் கப்படுவார். இந்தக் கோயிலில் நந்தியம் பெருமான் இல்லை. மணிவாசகப் பெருமான்தான் நந்தியம் பெருமானாகக் கருதப்படுகிறார்.

"நாம்
உண்ட கலமும் உடுப்பனவுஞ்
சூடுவனமும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம்"

என்று இறைவன் தம் எல்லா உடைமைகளையும் விசாரசருமனார் என்ற சிவனடியார்பால் விட்டமையால், அவர் சண்டிகேசுவரர் எனப்பெற்று, அவரது திருவுரு எல்லாச் சிவாலயங்களிலும் அமைக் கப்பட்டுவருகிறது. இந்தக் கோயிலில் மணிவாசகப் பெருந்தகை தான் சண்டிகேசுவரராகவும் உள்ளார். மேலும் இங்குக் கொடிமரம், காளை ஆகியவையும் இல்லை.

"பெரியது கேட்கில் எரிதவழ் வேலோய்"

எனக் கூறப்போந்த தமிழ் மூதாட்டி ஔவையார்,

"இறைவரோ தொண்டருள் ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் ஒண்ணாதே"

என உலகில் தொண்டர்தாம் எல்லாம் வல்ல இறைவனினும் பெரியவர் என வலியுறுத்துகின்றார். ஆழ்வார்களில் சிறந்தவராகிய நம்மாழ்வார்,

"தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டச் சடகோபன்"

என்று தம்மைக் குறிப்பிடுவதன் வாயிலாகத் தொண்டர்தம் சிறப்பை விதந்து உரைக்கின்றார், தொண்டர்தம் பெருமையை விளக்க எழுந்தவைதாம் ஆளுடைய நம்பிகளின் திருத்தொண்டத் தொகையும், அதன் வழிநூலான நம்பியாண்டார் நம்பிகளின் திருத் தொண்டர் திருவந்தாதியும், அதன் சார்புநூலான சேக்கிழார் பெரு மானால் பாடப்பெற்ற திருத்தொண்டர் புராணமும்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்றெல்லாம் தொண்டர்களின் சிறப்பு திருத்தொண்டர் புராணத்தில் பேசப்பெறுகிறது. அத்தகு பெருமைமிக்க தொண்டர்களுக்குச் சிறப்பிடம் அளிக்கும் கோயில் ஆவுடையார் கோயில். மணிவாசகப் பெருமான்தாம் நந்திகேசுவரராகவும் சண்டிகேசுவரராகவும் உள்ளார். இறைவனுக்குத் திருவீதிநாயகர் (உற்சவமூர்த்தி) வடிவங்கள் இல்லை. மணிவசாகப்பெருமானின் எழுந்தருளும் மேனிக்குத்தான் எல்லாத் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

இங்கு இறைவனுக்குப் படைக்கப்படும் அமுது ஏனைய கோயில்களினின்றும் வேறுபட்டு உள்ளது. பகலிலும் இரவிலும் புழுங்கல் அரிசிச்சோறு ஆவியுடன் கருவறைமுன்பு உள்ள சித்சபையில் உள்ள மேடையின்மீது அன்பர்கள் முன்னிலையில் படைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் உடல்நலத்திற்கு உறுதுணையாக மருத்துவர்களால் வலியுறுத்தப்பெறும் கீரை பகலிலும், பாகற்காய் இரவிலும் படைக்கப்படுகிறது.

இத்தகு பல்வேறு சிறப்புகளுடன், இந்தக் கோயில் சிற்பக் கலையுலகில் தனக்கெனத் தனி இடம்பெற்றுள்ளது. இங்குள்ள பல மண்டபங்களில் உள்ள கொடுங்கைகள் கலைச்சிறப்புமிக்கவையாம். வெளித்திருச்சுற்றில் மேல்கோடியில் உள்ள தியாகராச மண்டபத்தில் உள்ள கொடுங்கைகளின் அமைப்பு நம் முன்னோர்களின் கலைத்திண்மைக்குச் சான்று பகர்கின்றது. முறுக்குக்கம்பி, பட்டைக் கம்பி, திரணைக்கம்பி எனப் பல்வேறு வகையானவற்றைக் குறுக்கே வைத்து, அதன்மேல் உலோகத்தகடு வைத்ததுபோன்று கருங்கல்லில் உருவாக்கப்பட்டுள்ள கைபுனைந்து இயற்றிய கலை வண்மை கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கதாம். இந்தக் கொடுங்கைகளில் பலதிறப்பட்ட பூங்கொடிகள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிற்பக்கலை நுட்பங்கொண்ட கொடுங்கைகள் தமிழகத்தில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. மேலும் இங்குள்ள கற்சங்கிலிகள் ஒரே கல்லில் ஒன்பது அங்குல வட்டத்தில் வளையம் ஒன்றில் ஒன்றுகப் பிணைத்துத் தொடரும் எழில் சிற்பியின் கலைத்திண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இரண்டாவது திருச்சுற்றில் உள்ள நடனசபையின் கொடுங்கைகளும், கோயிலின் முகப்பில் உள்ள இரகுநாதபூபாலமண்டபத்தின் கொடுங்கைகளும் குறிப்பிடத்தக்கவையாம். அக்கால சிற்பிகள் ''தாரமங்கலம் தூண்கள் திருவலஞ்சுழி பலகணி, ஆவுடையார்கோயில் கொடுங்கைகள் நீங்கலாகச் செய்துகொடுப்போம்'' என்று கோயில்கட்டும் ஒப்பந்தத்தில் எழுதிக்கொடுப்பார்களாம். இதினின்றும் இங்குள்ள கொடுங்கைகளின் நுண்ணிய வியத்தகு வேலைத்திறமையை உய்த்துணரலாம்.

———

சேக்கிழார் திருக்கோயில் திருப்பணி தொடக்க விழா

குன்றத்தூர் தெய்வச் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணி தொடக்கவிழா 16-1-84 அன்று நடைபெற்றது. அன்று காலே 7 மணி அளவில், திலகவதியார் திருவருள் ஆதீனம் டாக்டர் தவத் திரு சிவ பிருந்தா தேவியார் அவர்கள் தலைமையில் திருவிளக்கு வழிபாடும், திருப்பணிப் பதிவுக்கல் திறந்து வைத்தலும் நடைபெற் றன. பின்னர் சிவ அருள்மொழித் தேவன், எம். ஏ. அவர்கள் வரவேற்புரையும், மு. பெ. சத்திய சாமுவேல், முருகன், பி. இ. ஆகியோர் திருப்பணி அறிமுகவுரையும் ஆற்றினர்.

அடுத்து அறச்சுடர் கயப்பாக்கம் முத்துலிங்கா ரெட்டியாரவர்கள் தலைமை உரையும், முன்னுள் முதல்வர் மீ. பக்தவச்சலம் அவர்கள் தொடக்கவுரையும் நிகழ்த்தினர். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தொடக்கப் பேருரை ஆற்றினுர். மகாவித்துவான் வி. நடேசனுர், பி.ஏ., ஏகாம்பர சிவாச்சாரியார், ந. ரா. முருகவேள், ஸ்ரீதேவி கருமாரிதாசர், டாக்டர் எஸ். பி. சபாரத்தினம் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். போரூர் ஆதீனம் சீலத்திரு சிவராமலிங்க சுவாமிகள், தவத்திரு மலேக்கேணி சுவாமிகள், திருமுருக விசாக நம்பி, திரு. சுந்தரம் மற்றும் பலர் விழாவிற்கு வந்திருந்தனர். மாங்காடு ஏகாம்பர சிவாச்சாரியார் அவர்கள் திருப்பணிக்கு ரூ. 1001/- நன்கொடை வழங்கினுர். குன்றத்தூர் திரு. சி. சிவப் பிரகாசம் அவர்கள் 27'×95' அளவுள்ள மனையைத் தவத்திரு சிவ பிருந்தா தேவி அம்மையாரிடம் நன்கொடையாக வழங்கினுர்.

— —

இன்றைய அரசியல் நிலே

இந்தப் பொல்லாத உலகத்தை நல்ல உலகமாகத் திருத்துவ தற்கு அரசியல்தான் சரியான கருவி என்று பலரும் கருதுகிருர்கள். இளைஞர்கள் அரசியல் ஒன்றையே இதற்கு உரிய வழி என்று நம்பு கிருர்கள். அதனுலேயே இந்தக் காலத்தில் மற்றத் துறைகளைவிட அரசியலில் எல்லோர்க்கும் தணியாத ஆர்வம் இருந்து வருகிறது. ஆனுல் அந்த அரசியல் துறையில்தான் இன்னும் கொடுமைகள் பல நிகழ்ந்து வருகின்றன.

—டாக்டர் மு. வரதராசனுர்.

(மண்ணின் மதிப்பு, பக். 188)

முனைவர் அப்பாத்துரையார்க்குத்
திரு. வி. க. விருது



தமிழ்நாட்டு அரசின் சார்பில் 16-1-84 மாலை, சென்னை வள்ளுவர் கோட்டத்தில், கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் வள்ளுவர் திருநாள் மிகச் சீருஞ் சிறப்புமாகக் கொண்டாடப்பெற்றது. இவ் விழாவினையொட்டி, இந்திய மாநில வங்கியின், சென்னை வட்டாரத் தலைமை நிலையத்தினர் சித்தப்படுத்திய ''வங்கியியல் கலைச்சொற் களஞ்சியம்'' என்னும் வெளியீட்டினைத் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வெளியிட்டார்கள். அதனை மாநில வங்கியின் பொது மேலாளர் கபில்தேவ் நய்யார் பெற்றுக்கொண்டார்.

அடுத்து நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கது முனைவர், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்கட்குத் திரு. வி. க. விருது வழங்கப்பெற்றதாகும். ஆண்டுதோறும் திரு. வி. க. அவர்கள் பெயரில் அறிஞர்கட்கு வழங்கப்பெறும் விருதாகிய பத்தாயிரம் வெண்பொற்காசுகள் இவ்வாண்டு, நம்முடைய கழக நூலாசிரியருள் ஒருவரும் பன்மொழிப் புலவருமான முனைவர் கா. அப்பாத்துரை அவர்கட்கு வழங்கப்பெற்றது. இவ் விருதினை முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் புலவரவர்கட்கு வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர்.

பன்மொழிப் புலவரவர்கள் நம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நூலாசிரியருள் ஒருவராக மட்டுமின்றிக் கழகத்தின் ஆக்கப் பணிகட்கெல்லாம் துணை நின்றவருமாவார். இவர் தொகுத்துக் கழகவழி வெளிவந்துள்ள ஆங்கிலத் தமிழ்க் கையகராதி புகழ் பெற்ற அகராதியாகும். இவர் ஆற்றிவந்த—வருகின்ற தமிழ்த் தொண்டுகள் அளப்பில.

இத்தகைய தமிழ்ப் பெரியாருக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் பெயரால் விருது வழங்கப்பெற்றிருப்பது சாலப் பொருத்தமுடைத்தாகும். புலவரவர்கட்கு எமது வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க அப்பாத்துரையார் !

———

கிரேக்க அலெக்சாண்டரும் ரோமானிய சீசரும்

[க. சி. கமலையா]

உலகம் போற்றும் மாமணி :

"உடைவாள் அருகிலும் ஹோமரின் படைப்பு என் சட்டைப் பையுள்ளும் இருக்க உலகில் எனக்கென்று வழிவகுத்துச் செல்வே னென்ற நம்பிக்கை எனக்குண்டு"[1] என்று நெப்போலியன் போனப் பார்ட் சொன்னான். பிரெஞ்சுக் குடிமகனான நெப்போலியனுக்கு ஹோமரின் நூல் உந்துமதகளிற்றென உதவிற்றென்றால் கிரேக்க நாட்டு அலெக்சாண்டர் ஹோமரின் காப்பியப் பாத்திரமான அக்கிலிஸ் தன்னுடைய மூதாதையன் என்று பெருமிதம் கொண்டதில் வியப்பொன்றுமில்லை. கி. மு. 336ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் இருபது ஆண்டு இளைஞனாகத் தன் தந்தையின் மாசிடோனிய அரசின் அரியணையிலமர்ந்தான். கொலையுண்ட தந்தையின் அரசு சிதைந்துபோகாதவாறு காப்பாற்றியதோடு அமைதியுறாமல், கிரீஸ்நாட்டில் ஒற்றுமையுணர்ச்சியை வளர்த்து எல்லாக் கிரேக்கரும் இன்றுவரை உலகம் போற்றும் ஒப்பிலா மாமணியெனத் தனக்கென்றொரு புகழேணியிலமர்ந்து கோலோச்சு பவன் அலெக்சாண்டர்.

நானிலம் புகழ அலெக்சாண்டருக்கு உதவிய ஹோமரின் காப்பியங்களையும் காப்பியப் பாத்திரங்களையும் மறக்கநேரிடின் அலெக்சாண்டரை நாம் சரியாகப் புரிந்துகொள்ள இயலாது. அலெக்சாண்டர் சென்ற இடங்களெல்லாம் - பாரசீகமோ, ஆப்கனிஸ் தானோ, இந்தியாவோ—ஹோமரின் காப்பியங்களைப் படிப்பதைக் கடைப்பிடித்தான். கிரீஸ்நாட்டின் தொன்மை வீர வரலாறும் வீரர் களான ஹெராக்கிள்ஸ், அக்கிலிஸ் என்ற மூதாதையரின் வழித் தோன்றல் தான் என்ற உணர்ச்சியும் அலெக்சாண்டரிடம் ஊறியிருந்தன. அலெக்சாண்டரின் இணையற்ற வீர வரலாற்றைப் படித்த தமிழ் அறிஞரெனத் தம்மைப் பறைசாற்றிக்கொள்வோரில் எத்தனைபேர் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற வள்ளல்களையும் வீரரையும் 'எம் முன்னோர்' என்று சொல்லிப் பெருமைப்படு கின்றனர்?

---

1. "With sword by my side and Homer in my pocket, I hope to carve my way through the world."—Abbot's '*Life of Nepoleon*'

பாரிமட்டும்தானா? மாரியும் உண்டே!

"இன்னோ ரின்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல வவையெமக் கீகென
என்னோரு மறிய வெடுத்திரைத் தன்று" (பு. பொ. வெ.)

என்ற வரிகள் 'இயன்மொழி வாழ்த்து' என்பதின் கொளுவாகும். அக் கொளுவுக்கமைந்த வெண்பா பின்வருமாறு :

"முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த விறைவர்போ னீயும்
கரவாம லீகை கடன்" (புறப்பொருள் வெண்பாமாலை)

வேண்டாமே கொடுத்த வள்ளல்கள் பாரி பேகனென்பார், முல்லைக் கொடி படரத் தன் பொற்றேரை நிறுத்திச் சென்ற பாரிவேளை நாம் மறக்கப்போமோ, மனித இனம்தான் துறக்கப்போமோ?

"பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே" (புறநானூறு-107)

பாரி பாரி யென்று உலகைப் புரக்கும் வேளைப் புகழும் புலவர் அவனைப்போன்று உலகு புரக்கும் மாரியும் உண்டு என்பதை மறந்ததேனோ? என்ற கபிலரின் கருத்துரையில் மாரியும் என்று உம்மை கொடுத்து ஏற்றம் கொடுக்கும் அருமைதான் என்னே!

அலெக்சாண்டரின் அறிவுப்பசி :

கிரீஸ்நாடு பிளவின்றியும் கிரேக்கர் ஒன்றுபட்டும் இருக்க வேண்டுமென்பதுவே அலெக்சாண்டரின் தலையாய கொள்கை. கி. மு. 334ஆம் ஆண்டில் ஆசியக் கண்டத்துள் நுழைந்து, பாரசீக மன்னனை வென்று இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலும் போரஸ் (புருஷ்) என்ற அரசன் படைகளுடன் போராடி அலெக்சாண்டர் வாகைமாலை சூடினான். "உன்னை நான் எவ்வாறு நடத்த வேண்டும்" என்ற அலெக்சாண்டரின் கேள்விக்கு "அரசனாக மதிக்கவேண்டும்" என்று போரஸ் விடை பகர்ந்தான். அலெக்சாண்டர் பெருமிதத்துடன் அதை ஏற்றுக்கொண்டு அவ்வாறே அரசனாக மதித்தான். உலகில் கிரேக்க நாகரிகமே தலைசிறந்த தென்றும், கிரேக்கர் பிறரினும் உயர்ந்தவரென்றும் கருதிய அலெக்சாண்டரின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது. உலகைப் புரிந்துகொள்ளும் அறிவுப்பசி அலெக்சாண்டரை உந்தியது.

எம்மொழி பேசுபவராயினும் எந்நாட்டினராயினும் கிரேக்கராகவே மதிக்கப்பட்டுக் கிரேக்க நாகரிகத்துடன் இணையமுடியும் என்று உலகக் குடிமகனாக அலெக்சாண்டர் மாறினான்.

தரைவழி உலகின் பிறபகுதிகளை அறிந்துகொள்ள விரும்பிய அலெக்சாண்டர் கடல்வழி செல்வதற்கும் அடிகோலியவனுமாவான். இந்தியாவிலிருந்து திரும்பும்போது சிந்துநதியில் முதலைகளைக் கண்ட அலெக்சாண்டர் தான் முன்னர் முதலைகளைக் கண்ட நைல் நதி தானோ என ஐயுற்று, சிந்துநதி கடலோடு கலக்கும் அகன்ற பகுதி வரை மரக்கலங்களில் சென்றான். அலெக்சாண்டரே கடல் வழியை நாடவில்லையென்றாலும் அவனுடைய கடற்படைத் தலைவன் நியார்க்கஸ் (Nearchus) என்பவன் இத்துறையில் முயன்றான். பின்னர் கிரேக்கரும் ரோமானியரும் கடல்வழி இந்தியாவின் மேற்குக் கடற்கரைப்பகுதியை அடைந்தனர். ஒருலகு, ஓரரசன் (அவன் அலெக்சாண்டரே) ஓரினம் (நிறம், மொழி, இடம் மாறு படினும்) என்றாலும் கடவுள் ஒருவனே என்ற எண்ணக் கோட்பாடு வளர்வது சரியன்றோ! இத்தகைய எண்ணம் உருவாக முன்னோடியாய் விளங்கியவன் அலெக்சாண்டர்.

எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியா நகரம் அலெக்சாண்டரால் நிறுவப்பட்டது; கிரேக்க நகரங்களில் எழில் கொழிக்கும் நகரம், நிறுவியகாலம் தொடர்ந்து மனித இனத்தின் எண்ணங்கள் அலெக் சாண்டிரியா நகரத்தினர் எண்ணிய—எழுதிய கருத்துகளால் உருப் பெற்றன. அலெக்சாண்டிரியா அறிவுக் களஞ்சியமாயிற்று. அங்கு வளர்ந்த நூல்நிலையத்தின் தாக்கம் பெற்றன இலக்கியமும் விஞ் ஞானமும். அலெக்சாண்டர் நிறுவிய அலெக்சாண்டிரியா இரண் டாயிரத்து முந்நூறு ஆண்டுகளாக அவன் பேரைத் தாங்கி இன்று வரை விளங்குகிறது. நகரத்தை நாடாகக் கொண்ட கிரேக்கர் பத்து மைல்கள் தள்ளியிருப்பவரையும் மாற்றாரென மதித்தனர். அத்தகைய மக்களின் மனப்பாங்கை மாற்றி அனைத்து கிரீஸ் நாட்டினரும் ஓரினத் தவர் என்று அலெக்சாண்டர் உணரச் செய்தான்,

அடுத்தபடியாக உலகின் பல இன மக்கள் ஒருசாராரை மற்றொரு சாரார் அறிந்துகொள்ள வழிகோலியவனும் அலெக்சாண்டரே. இந்தியாவிலிருந்து திரும்பும் வழியில் பாபிலோன் நகரத்தில் கி. மு. 323 ஆம் ஆண்டில் காய்ச்சல் கண்டு அலெக்சாண்டர் இறந்தான். முட்டையோட்டுக்குள் பதுங்கிக்கிடந்த குஞ்சு வெளியுலகில் பறந்து —பறந்து—திரிந்து செல்வதுபோல மனித இனத்தை எட்டிப்பார்க்க அலெக்சாண்டர் முதலடி எடுத்துவைத்தான் என்பது பொருந்தும்,

(தொடரும்)

அறிவூட்டும் புதினம்

[தி. நா. அறிவுஒளி., க. மு., கல். இ.]

வானில் முகில் இயல்பாய்த் தவழ்ந்து செல்லுதலைப் போன்றும், உரிய பருவத்தில் வண்ணமிகு தண்ணறு மணமலர் மலர்ந்து சிரிப்பது போன்றும், பண்டைச் சான்றோர் தம் படைப்புகளை இயல்பாக இயற்றியுதவினர். உலகுக்கு உணர்த்தவேண்டியவற்றின் உள் உந்துதலினால், மக்களினத்தின்பால் இயற்கையாகச் சான்றோர் தமக்குள்ள பேரருட் பெருக்கால் இலக்கியப் படைப்புகள் இயற்றி யளிக்கின்றனர். அதனாற்றான், 'திருவள்ளுவர் அருளிய திருக்குறள்' எனவும், 'ஆழ்வார் அருளிச் செயல்' எனவும், பெரியோரின் நூல் ஆக்கங்களை, அவர்களின் அருள் ஆக்கங்களாகப் போற்றுவர் அறிஞர்.

உலக மக்களின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் கருதிப் பண்டைச் சான்றோர் தம் இலக்கியச் செல்வங்களைப் படைத்தளித் தனரே யன்றித் தம் தந்நல வேட்கைக்குரிய பொன், பொருள், பட்டம், பதவி முதலிய பசிகளைத் தணித்தற் பொருட்டு நூல் இயற்றினாரல்லர்.

'ஒருகருத்து அழகியதாக இருப்பின், அது எல்லாராலும் விரிவாகப் பயிலப்பெற்றுப் பாராட்டப் பெறும்; இல்லெனில் புறக் கணிக்கப் பெறும்' என 'கன்பூசியசு' கூறியுள்ளார்.[1] ஆயின், இலக்கியங்களை மக்கள் தாமே பெரிய அளவில் கற்றுச் சுவைக் கின்றனரா எனின், அது பெரிய வினாக்குறியையே தோற்றுவிக்கும்.

இலக்கியங்கள் எவ்வளவு படைப்பாற்றல் உடையனவாயிருப் பினும், எத்துணை இன்றியமையா உணர்வும் அறிவும் சுவையுங் கனிந்து பொலிந்திடினும், அவற்றை மக்களிடையே கொண்டு செலுத்த 'இலக்கியம் பரப்புநர் குழு' இடையறாது, காலந்தோறும் தொண்டு செய்தல்வேண்டும். இலக்கியம பரப்புநர் குழுவின் சுவை ஞர் குழுவின் முழு அளவில் உழைக்கும் 'இலக்கிய இயக்கம்' முழு மூச் சாகச் செயற்பட்டாலொழிய மக்களிடம் ஓர் இலக்கியம் நிலையான ஆட்சியும் வழக்கும் பெறுதல் அரிதே. உலக நாடுகள் எங்கும் இந் நிலையே அமைந்துள்ளது.

---

1. If a Statement is not beautiful, it will not be read far and wide.

அறிவாற்றல் மிக்க அறிஞர் கூட்டம் இடைவிடாது, பல்லாண்டுகள் நாடோறும் முழங்கியும் எழுதியும்தான் பல இலக்கியங்கள் மக்களிடம் பரவின,

கம்பர், இளங்கோ, வில்லி, சேக்கிழார், சமயத்துறை நூல்கள் ஆகியவை இடைவிடாத பரப்புநர் பணியாலேயே பரவின; நிலை பெற்றன. சேக்சுபியர், மிலிதன் முதலியோர் நூல்களின் நிலைப் பாடும் இவ்வாறு அமைந்தனவே.

தமிழகத்திற்குரியவையாக அமையாத இராமகதை, பாண்டவர் கதை இடைக்கால அரசர்களின் திட்டமிட்ட பரப்புகைப் பணி யாலேயே சிற்றூர் மக்களிடம் வேர்பரவி நிலைத்துள்ளன. தெருக் கூத்து, இசையுரை கதை, தனிக்கூத்தர் நடிப்பு ஆகியவை இவ்விரு கதைகளையும் நிலைப்படுத்துவதிலும் பரப்புவதிலும் ஆற்றிய பெரும் பான்மைப் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

எந்தப் பாவலனுக்கும், எந்த எழுத்தாளனுக்கும் இத்தகு விளம் பரப் பேரியக்கங்கள் ஆண்டாண்டுகளாக இடைவிடாது இயங்கி வந்துள்ளன. பரப்பும்பணியாற்ருவிட்டால் படைப்பாளியின் இலக் கியப் படைப்பு மட்டும் தன்னுற்றலால் அழியாமல் இருப்பதோ, பெரும்பாலாரை அணுகுவதோ இயலாது. சீரிய ஆற்றலற்றவனு யினும், பரப்பும் குழுவின் இயக்க ஆற்றலால்—விளம்பர வல்லமை யால்—மக்கள்பால் அறிமுகமாகி, ஆற்றலுடன் நிலைபெற்றுவிடக் கூடும்.

இந்த உண்மை தெரிந்துதான் நடிகர்கள் தம் பெயரில் சுவைஞர் மன்றங்களை அமைத்துத் தம் பெயரை விளம்பரப்படுத்துகின்றனர்.

காலத்தை வெல்லும் பேரிலக்கியங்களும் காலந்தோறும் சுவைஞர்—பரப்புநர் குழுவைப் பெற்ருல்தான் பிழைத்து வாழமுடியும். நிலைத்து நிற்க வியலும்.

இலக்கியங்களின் வாழ்வும் மக்கள் வாழ்வைப் போலப் போராட் டங்களைக் கண்டு போராடி வென்று ஓங்கி நிலைப்பது வழக்கமாகும்.

[2]பேரறிஞர் காரல்மார்க்சு கூறியதைப் போன்று, ''கடந்தகாலக் குமுகாயத்தின் வரலாறு இருவேறு வகுப்பினரின் (சுரண்டப் படுவோர், சுரண்டுவோர்) போராட்ட வரலாறே'' என்னுங் கருத்தைச் சற்று மாற்றி, ''கடந்தகால—இக்கால—இலக்கியங் களின் வெற்றி வரலாறு, சுவைக்குழு பெற்ற இலக்கியம் (முதலாளி

---

2. 'The History of all past society is the history of the struggle between classes'—Communist Manifesto.

இலக்கியம்!) சுவைக்குழு பெருத இலக்கியம் (ஏழை இலக்கியம்) என இருவேறு இன இலக்கியங்களின் போராட்ட வரலாறே'' எனலாம்.

[3]'புதிய கருத்துகள் ஆக்கம் பெற்றுயரப் பழங்குமுகாயத்திற்குப் போராட்டமே மருத்துவி யாகும்' என்னும் மார்க்சின் கூற்றும் நம் ஆய்வுக் குரியதேயாகும். வாழ்வு ஆக்கம்பெறப் போராட்டமே இன்றியமையாததாக இருக்கிறது.

வாழ்வில் போராட்டம் அமையும் குமுகாயத்தில் தோன்றும் இலக்கியமும் போராட்ட இலக்கியமாகவே அமையும். அத்தகு போராட்ட இலக்கியங்களே மக்கள் வாழ்வோட்டத்திற்கு முன்னேற்றத்தை அமைக்க முடியும்.

அந்த வகையில் உருவான கதையே கோகிலாம்பாள் கடிதங்கள் ஆகும். இக் கதையே இரு இனப் போராட்டக் கதையாகும். நெடுங்காலமாக நிலவும் ஈரின முரண்பாட்டை ஒருவாறு தீர்க்க முயலும் முயற்சியாகக் கோகிலாம்பாள் கடிதங்கள் படைக்கப் பட்டதெனலாம்.

முரண்பாட்டை மிகுவிக்கும் போராட்டக் கதையும் உண்டு. முரண்பாட்டை மாற்றும் போர்க் கதையும் உண்டு. இப் போர்க் களக் கதை முரண்பாட்டை நீக்கும் மருந்தாகவே அமைந்துள்ளது.

குமுகாயத்தில் நிலவும் பல துறையிலுள்ள பலவகை நோய்களுக்கு அறிவுமருந்தளிப்பதால், இதனை 'மருந்திலக்கியம்' எனலாம். புதுச்சுவையும் புதுமைப்படைப்புமாக அமைவதால் 'விருந்திலக்கியம்' என்றும் போற்றலாம்.

கதைத் தலைவி கோகிலாவும், அவள் தாய் கமலாவும் வீறுகெழுமிய அறிவுமிக்க பெண்களாக மறைமலையடிகளார் படைத்துள்ளார். நம் நாட்டில் பெண்களைப் பேதைகளாக, கோழைகளாக, மெல்லியலாராகக் காதல் செய்வதற்குமட்டுமே உரியவராகக் காட்டிக் கதை எழுதப்பட்ட காலத்தில் அடிகளார் ஆண்மையும் அறிவும் செயலாற்றலு மிக்க கதைத் தலைவியரைப் படைத்த புதுமையும் புலமையும் நினைந்து வியக்கத்தக்கதே. இவர் நெறியில் பாவேந்தரின் இலக்கியத் தலைவியர் அறிவாற்றல்வாய்ந்த மகளிராகப் பொலிகின்றமையை உணரவேண்டும். (தொடரும்)

---

3. 'Force is the midwife of every old society pregnant with a new one'—Marse.

செய்திகள்

திருவள்ளுவர் திருநாள்

வழக்கம்போல் இவ்வாண்டு திருவள்ளுவர் திருநாள் 16—1—84 மாலை வள்ளுவர் கோட்டத்தில், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்பு மிகு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் நூல் வெளியிடல், சிறந்த எழுத்தாளர்கட்கும் புலவர் கட்கும் பரிசு வழங்குதல் ஆகியன நடைபெற்றன. முனைவர், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்க்குத் திரு. வி. க. விருது வழங்கப் பெற்றதுடன், 1981—82ஆம் ஆண்டின் சிறந்த கவிதை, புதினம், சிறுகதை, மொழியாராய்ச்சி, மருத்துவம் இன்னபிற துறை களில் சிறந்த நூல்கள் எழுதிய ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன. இவ்வகையில் பரிசுகள் பெற்றவர்களுள், டாக்டர் மோகன ராசு, ச. வே. சுப்பிரமணியம், டாக்டர் பி. எம். ரெக்ஸ். பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், முன்னாள் துணைவேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு, பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், திருக்குறளார் முனுசாமி, பி. வி. கிரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கோயிற்பட்டி திருவள்ளுவர் மன்ற ஆண்டு விழா

கோயிற்பட்டி திருவள்ளுவர் மன்றத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், காரல் மார்க்சு நூற்றாண்டு விழாவும் சனவரித் திங்கள் 28, 29ஆம் நாள்களில் திருவள்ளுவர் திடலில் நடைபெற்றன. திருமிகு சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமை ஏற்றார். பேராசிரியர் துரையரசு, பாவலரேறு முத்தரசு, அறிஞர் சாலமன் பாப்பையா, பாவலர் மணி ஆ. பழநி ஆகியோர் பங்கு பெற்றனர். வழக்காடு மன்றத்திற்குப் பேராசிரியர் நமசிவாயம் நடுவராக அமர்ந்திருக்கப் பேராசிரியர்கள் அ. வ. இராசகோபாலன், அ. அறிவு ஒளி ஆகியோர் பங்கு கொண்டனர்.

சைதையில் முப்பெரு விழா

சைதைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 15—1—84 அன்று மாலை, சைதை காரணீசுவரர் திருக்கோயிலில், திரு. த. பாலசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில், தமிழ்த் திருநாள் விழா, திருக் கோவையார் நிறைவு விழா, சிவஞான சித்தியார் தொடக்க விழா ஆகிய முப்பெரு விழாக்களும், சைதைத் தமிழ்ச் சங்க ஆசிரியர் வாழ்வியற் புலவர் திரு. சொ. ர. தேமொழியார் அவர்களுக்குச் சிறப்புச் செய்து வாழ்த்துரை வழங்கலும் நடைபெற்றன. திரு. தெ. நாகலிங்கம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார், முனைவர் ஒளவை து. நடராசன், தேவி கருமாரி தாசர், அறச்சுடர் க. முத்துலிங்கா ரெட்டியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முருகவேள் பன்னிரு திருமுறை தொடர் சொற்பொழிவு

சென்னை முருகவேள் பன்னிரு திருமுறை மன்றத்தின் சார்பில், தேவி கருமாரிதாச சுவாமிகள் செவ்வாய்க் கிழமைதோறும், வண்ணையம்பதி எம். சி. சாலை 99ஆம் எண்ணுள்ள தெய்வப் பணி

மகளிர் மன்ற நிலையத்தில் முருகவேள் பன்னிரு திருமுறை தொடர் சொற்பொழிவு ஆற்றி வருகிருர்கள். இச் சொற்பொழிவினை 17—1—84 செவ்வாய்க் கிழமை மாலை, அறச்சுடர் கயப்பாக்கம் திரு. க. முத்துலிங்கா ரெட்டியாரவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

வேலூரில் முப்பெரு விழா

வேலூர் இலக்கிய அன்பர்கள் வட்டத்தின் சார்பில், வேலூர் வணிக வைசிய திருமண மண்டபத்தில் 14—1—84இல் 'முப்பெரும் விழா' நடந்தது. திரு. வே. சோலைநாதன் தலைமை தாங்கினர். திரு. ச. குமரவேல் வரவேற்புரை ஆற்றினர். திரு. ஏ. எஸ். ஏ. பரமசிவம் விழாவைத் தொடக்கி வைத்துப் பேசினர். திரு. மா சண்முக சுந்தரம் முன்னிலை ஏற்றுப் பேசினர்.

விழாவில் தமிழக அரசின் பழங்கலை இயக்குநர் கலைமாமணி திருக்குறள் வி. முனுசாமி அவர்கட்குப் பாராட்டும், கவிஞர் வேலூர் ம. நாராயணன் எழுதிய "அறிமுகம்" நூல் வெளியீட்டு விழாவும், 'சீவகசிந்தாமணி' சிறப்புரைப் பெருவிழாவும் நிகழ்ந்தன.

திருக்குறளார்க்கு திரு. வாசு. இராமசந்திரன் பொன்னுடை அணிவித்தார். திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன் "நகைச்சுவை இமயம்" எனும் பட்டம் அளித்தார். திரு. வி. எஸ். ரேணுகோபால் அன்பளிப்பு வழங்கினர். திரு வி. ஆர். தங்கவேல் நூல்கள் வழங்கினர்.

"அறிமுகம்" நூலாசிரியர்க்கு திரு வி. எஸ். இராமேஷ்குமார் "டேப் ரிகார்டர்" பரிசு வழங்கினர். அறிமுகம் நூலைத் திருக்குறளார் வெளியிட திரு. டாக்டர் த. குமரகுரு முதல் நூலைப் பெற்றுக் கொண்டார். திரு. ஜி. இராமலிங்கம், திரு. ஜே. வி. நாதன், திரு. இரா. அண்ணமலை, திரு. தொல்காப்பியன் வாழ்த்திப் பேசினர். 'சீவக சிந்தாமணி' பற்றிச் சொற்பொழிவாற்றிய திரு. சாந்தகுமார் ஜெயின் அவர்கட்கு, திரு. க. இராசு, பொன்னுடை அணிவித்தார். திரு. மோதிலால் அன்பளிப்பு வழங்கினர்.

பாராட்டுக்குத் திருக்குறளார் நன்றி தெரிவித்துப் பேசினர். வேலூர் ம. நாராயணன் ஏற்புரை வழங்கினர். திரு. வே. மோ. சத்தியமூர்த்தி நன்றியுரை ஆற்ற விழா இனிது நிறைவுற்றது.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ருஅ, உ0சு ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
முனைவர் மா. நன்னன் அவர்கள் (தந்தையார் நினைவு நாளை முன்னிட்டு)	25	00
கல்லை. த. கண்ணன் (ஆசிரியர் 'வள்ளுவர் வழி')	5	00

மதிப்புரை

கடல் நடுவே ஒரு கண்ணீர்த் துளி

[ஆசிரியர் : கவிஞர் இளந்தேவன். வெளியிடுவோர் : திருமதி சந்திரகாந்தி இளந்தேவன், 3-ஏ. திருவீதியான் தெரு. கோபாலபுரம், சென்னை-86. விலை : உரூ. 2-50.]

ஈழத் தமிழரின் இன்னல் கண்டு பொருத நெஞ்சங்களுள் ஒன்று இளந்தேவன் நெஞ்சம். அந் நெஞ்சப்பதைப்பின் எதிரொலிதான் "கடல் நடுவே ஒரு கண்ணீர்த் துளி" என்னுமிந்நூல். மரணத்தீவு, புலிகள் அழுவதில்லை, தாயகம் தேடுகிறோம் என நான்கே கவிதைகளால் ஒரு புரட்சிக் காவியமாக உருவாகியுள்ளது இது. 'புலிகள் அழுவதில்லை' என்ற தலைப்பில்,

"ஆவிகள் போகையில் தூதுகள் போவதில்
ஆர்நிகர் இந்தியர் தமக்கு! அட
ஆயிரம் ஆயிரம் சாவுகள் கண்டபின்
அவனுடன் தொடர்கதை எதற்கு?—இதை
ஆள்பவர் செவிகளில் முழக்கு"

என்னும் கவிதை வரிகளே போதும், இக் கவிஞரின் கருத்தினை விளக்க. அதுமட்டுமன்று; நூலின் முன்னுரையில்,

"உலகத் தமிழன் கண் விழிக்கப் போகிறான்; இந்தக் காப்பியம் அவனுக்குப் பள்ளியெழுச்சி" என்கிறார் 'கடல் நடுவில் ஒரு கண்ணீர்த் துளி' கலங்கி நிற்கும் தமிழ் நெஞ்சங்களுக்குப் புத்துணர்ச்சியூட்ட வல்லதோர் எழுச்சிக் காவியம் எனலாம்.

பாவேந்தரின் உணர்வுகள் பாழடிக்கப்பட்டது குற்றம்

(கவிதை வழக்காடு மன்றம்)

[வழக்காடுவோர் : கவிஞர் நா. மணிமாறன், எம். ஏ., எம். எல். ஏ. பேராசிரியர் சக்திப்புயல், எம். ஏ., டிப். லிங், டிப். (in French., கவிஞர் புதுவைச் செல்வம், கவிஞர் இலக்கியன், தென்றல் பதிப்பகம், 95 ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி-605001, விலை : உரூ. 5-00.]

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 93ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 8—5—83இல் புதுவை அரசு நடத்தியகவிதை வழக்காடு மன்றத்தின் தொகுப்பு நூலாகிய இந் நூலில், கவிஞர் நா. மணிமாறன் தொடுத்த வழக்கும், அதற்குப் பேராசிரியர் சக்திப்புயல், கவிஞர்கள் புதுவை சிவம், இலக்கியன் ஆகியோர் விடுத்த மறுப்புகளும், இதற்கு நடுவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் அளித்த தீர்ப்பும் ஆகிய அனைத்தும் கவி மழையாய்ப் பொழிந்துள்ளன. வழக்கு மிடுக்கு நடை போடுகின்றது. கவிஞர்களின் கருத்துகள், ஒன்றையொன்று போட்டியிட்டு, பாவேந்தரின் உணர்வுகளைப் பாரறியச் செய்கின்றன. கவிஞர்கள் கருத்தூன்றிப் படிக்க வேண்டிய நூல். தமிழ் இலக்கிய உலகில் இத்தகைய புதுமுறை இலக்கியத்தை உருவாக்கிய அன்பர்களையும், அவர்கட்கு உறுதுணை நின்ற புதுவை அரசினையும் பாராட்டுகிறோம்.

மதுரையின் மாண்பு

[ஆசிரியர்: ஸ்ரீ ராம கதாரத்ன வே, தியாகராஜன், முன்னேற்றப் பதிப்பகம், 21, மாட்லி சாலை, சென்னை-17. உரு. 15.]

திருவிளையாடற் புராணத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில், இனிய எளிய தமிழ் நடையில், எல்லாரும் படித்துச் சுவையும் பயனுமடையும் வகையில் ஸ்ரீராம கதாரத்ன வே. தியாகராஜன் அவர்கள் வடித்துத் தந்துள்ள அழகிய நூலே மதுரையின் மாண்பு என்னும் இந் நூல். 64 திருவிளையாடல்களுள் இன்றியமையாத செய்திகளை 35 புதிய தலைப்புகளுடன் வெளியிட்டிருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது. பதிப்பு முறை அதனினும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் - இலக்கிய மதிப்பீடு

[ஆசிரியர்: டாக்டர் ப. கோபாலன், இலட்சுமி பதிப்பகம், 7/7 நரசிம்மபுரம், குனிய முத்தூர், அ. நி., கோயமுத்தூர்-641008, பக்கங்கள் 472+24, விலை : உரு. 35/-]

புராணங்கள் பத்திச் சுவையூட்டுவன என்பதே மக்களிடையே நிலவும் பொதுக் கருத்து. ஆனால் அப் புராணங்களை இலக்கியக் கண் கொண்டு பார்க்கும்போதுதான் கற்பனை வளம், உவமை நயம், நடையழகு என்பன தெரியும். அவ் வகையில் பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தை மிகச் சிறந்த முறையில் கற்பார்க்குக் களிப்பூட்டும் வகையில் ஆய்வு செய்துள்ளார் இந் நூலாசிரியர். 'திரு' என்பதை ஆய்வுசெய்து, விளையாட்டுக்கு விளக்கந்தந்து, புராணக் கதைகளுக்குப் பொருள் விளக்கம் தந்து, திருவிளையாடல் காப்பியப் பண்பினை விளக்கி, மொழி, நடை, கற்பனை ஆகியனபற்றியெல்லாம் விரிவாக ஆராய்கிறார். இவரது ஆராய்ச்சி இலக்கிய வரலாற்று அடிப்படையிலும், யாப்பியல், அணியியல் நோக்கிலும் குமுகாய நோக்கிலும் அமைந்து நடைபோடுவது பெரிதும் பாராட்டத்தக்கது.

டாக்டர் கோபால் அவர்கள் டாக்டர் பட்டம் பெறுதற்கெனச் செய்த ஆராய்ச்சியின் விளைவே இவ்வரிய ஆராய்ச்சி நூல். ஓர் ஆராய்ச்சி நூல் எப்படி அமைய வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது இந்நூல். இதனைப் பயில்வார் திரு கோபாலன் அவர்களின் நுண்மாண் நுழை புலத்தையும், ஆழ்ந்த புலமையினையும், திறனாய்வுத் திறத்தினையும் அறிந்தின்புறுவர். திருவிளையாடல் புராணத்தில் என்ன இருக்கிறது, புராணக் கதை தானே என்று நினைப்பவர்கள் இதனை ஒருகால் பயின்றால், இலக்கிய நயம் என்னும் புதையலை ஆங்காங்கே கண்டு மகிழ்வர் என்பதில் ஐயமில்லை.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.

புரட்சிக் கவிஞர்

(பாவேந்தரைப்பற்றி முதன் முதலில் வெளியிடப்பெற்ற தொகுப்பு நூல்) தொகுப்பாளர்: முல்லை முத்தையா.

இத்தொகுப்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களைப் பற்றி அறிஞர் பெருமக்கள் வழங்கிய கருத்துரைகள் நன்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ரூ. 5-00

மனஇயலும் குழந்தைவளர்ப்பும்

—ரெவரெண்ட் சத்திய சாமுவேல், பி.ஏ., எல்.டி.

குழந்தை வளர்ப்புபற்றிய அறிவினையும், மனப்பக்குவத்தையும் பெற வழி காட்டுகிறது இந் நூல். திருமணப் பரிசாக வழங்குவதற்கும் ஏற்ற நூல். ரூ. 7-50

மன இயலும் மண வாழ்க்கையும்

—ரெவரெண்ட் சத்திய சாமுவேல், பி.ஏ., எல்.டி

மண வாழ்க்கையில் ஈடுபடுவோர் தெரிந்துகொள்ளவேண்டிய பயனுள்ள பல அரிய செய்திகளைக் கூறுகிறது இந்நூல். திருமணப் பரிசாக வழங்குவதற்கு ஏற்றது. ரூ. 12-00

தமிழ்த்தாய் பிள்ளைத் தமிழ்—கவிஞர் பேகன்

தமிழ்மொழியின் மாண்புகளை இனிய கவிதைகளால் விளக்குகிறார் இவ்வாசிரியர். தமிழ்த்தாய்க்கு இப்படியொரு பிள்ளைத்தமிழ் பாடியிருப்பது இதுவே முதன்மையும் புதுமையும் ஆகும். ரூ. 5-00

கழக நிலையங்களில் கிடைக்கும் பிற பதிப்பாளர்களின் புதிய வெளியீடுகள்

திணைவு அலைகள்—நெ. து. சுந்தரவடிவேலு	70-00
தமிழக அற்புத ஆலயங்கள்—வெ. நாரயயணசாமி	20-00
தாயுமானவரும் திருநாவுக்கரசரும்—புலவர். செந்துறைமுத்து	9-00
தாயுமானவரும் மாணிக்கவாசகரும் ,,	9-00
தாயுமானவரும் பட்டினத்தாரும் ,,	11-00
தாயுமானவரும் வள்ளலாரும் ,,	10-00
இலங்கைப் படுகொலை—க. பெருமாள்	10-00
நடையியல்—ஜெ. நீதிவாணன்	13-50
சித்தர் மகள்—டாக்டர் நா. பாண்டுரங்கன்	8-50
ஆகமன்—அ. கு. ஆதித்தர்	7-00
பாரதிதாசன் நாடகத்திறன்—கூ. வ எழிலரசு	13-00
மதுரை மீனாட்சி—ச. மெய்யப்பன்	9 00
பஞ்ச தந்திரக் கதைகள்—சம்பந்தம்	9.00
சிவஞான போதம் மூல மும் பதவுரையும்—ந. ரா. முருகவேள்	15-00
என் ஆசிரியப் பிரான்—கி. வா. ஜகந்நாதன்	12 00
இதுவரை நான்—கவிஞர் வைரமுத்து	14-00

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 16/-	உள்நாடு	ரூ. 150/-
வெளிநாடு	ரூ. 30/-	வெளிநாடு	ரூ. 300/-